பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 14 வெள்ளிக்கிழமை (28~06~2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:215

# தீவகம் நோக்கிய பேரணியில் மக்கள் திரளாகப் பங்கேற்பு!

## சமாதான விரோத சக்திகளுக்கு எதிராக ஒன்று திரண்டு கோஷம்

ஊர்காவற்றுறை,ஜூன்28

**தீவகத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள்மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலையும் சமாதானத்துக்கு விரோதமான சகதிகளின இது போன்ற நடவடிக்கைககளையும் கண்டித்து நேற்று யாழ்.நகரிலிருந்து ஊர்காவற்றுறை நோக்கிப் பெரும் மக்கள் பேரணி நடத்தப்பட்டது.**

**சமாதானத்தை வலியுறுத்தும் கோஷங்களை முழங்கியவாறு பல்லாயிரக் கணக்கானோர் இந்தப் பேரணியில் கலந்துகொண்டனர்.**

தீவகம் நோக்கிய மக்கள் பேரணி நேற்று முற்பகல் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இருந்து ஆரம்பமாகியது.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து வந்து அங்கு கூடியோர் பின்னர் பேரணியாகக் கிளம்பினர்.

ஆயிரக்கணக்கான பொதுமக்கள் முந்நூறுக்கும் மேற்பட்ட வாகனங்களில் முற்பகல் 11.35 மணியளவில் தமது தீவகம் நோக்கிய பயணத்தை ஆரம்பித்தனர்.

இராணுவ அடக்குமுறையின் சின்னமாகச் சித்திரிக்கப்பட்ட, பெரிய அளவிலான இராணுவச் சப்பாத்து பொருத்தப்பட்ட வர்கனம் முன்னே சென்றது. அதில் எழுச்சிக் கீதங்கள் இசைக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்களான என்ரவிராஜ், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரின் வாகனங்கள் தொடர்ந்தன.

பேரணியை ஏற்பாடு செய்த வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின்

(14ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டின் வான்பரப்பு எங்கும் பறக்கும் மர்மப் பொருள்கள்

### ஆய்வுத் தகவல்கள் உறுதிசெய்கின்றன

கொழும்பு,ஜூன்28

"நாட்டின் பல பகுதிகளிலும் வான்பரப்பில் மர்மப்பொருள்கள் பறப்பது ஆய்வின்மூலம் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. பொலன்னறுவை உட்பட அண்மைக்காலத்தில் பல இடங்களில் வானில் மர்மப்பொருள்களை அவதானித்ததாகப் பொதுமக்கள் தெரிவித்த தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக அடையாளப்படுத்தப்படாத பறக்கும் பொருள்களை ஆய்வு செய்வதற்கான இலங்கை ஒன்றியத்தின் தலைவர் கலாநிதி சந்தன ஜெயரத்ன தெரிவித்திருக்கிறார்.

கடந்த மே 13முதல் இலங்கை வான்பரப்பில் இத்தகைய பறக்கும் பொருள்கள் அதிகளவில் தென்படுவதாகக் கூறப்படுகிறது. அடையாளந் தெரியாத பறக்கும் பொருள்கள் அடிகடி பொலன்னறுவைப் பகுதியில் தென்பட்டிருக்கின்றன.

அங்கு சென்று இருவாரகாலம் ஆய்வுகளை மேற்கொண்ட குழுவினர் கொழும்பு திரும்பி செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினர்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் வன்செயல் பரவுகிறது!

மட்டக்களப்பு,ஜூன்28

மூதூரில் ஆரம்பித்த வன்செயல்கள் கிழக்கின் பல இடங்களுக்கும் பரவியிருக்கின்றன.

மூதூரில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு ஆட்சேபம் தெரிவித்து மட்டக்களப்பில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டபோது பெரும் வன்முறை வெடித்தது. பரவலாக இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு, கிரனேட் வீச்சு, தீ வைப்பு சம்பவங்களில் மூவர் பலியாகினர்; ஐம்பதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். தமிழர் மற்றும முஸ்லிம்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் பல நாசமாகியுள்ளன.

கிரனேட் தாக்குதலில் உயிரிழந்த இருவரின் சடலங்கள் நேற்று மாலை மட்டக்களப்பு மாஞ்சோலை கிராமிய ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன. நேற்றுப் பகல் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் காயமடைந்த ஒருவர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவச் சப்பாத்து தீக்கிரையான காட்சி!

ஊர்காவற்றுறை,ஜூன்28

அடக்குமுறையைச் சித்திரிக்கும் பிரமாண்டமான இராணுவச் சப்பாத்து ஒன்று நேற்று ஊர்காவற்றுறையில் தீக்கிரையாக்கப்பட்டது.

யாழ்.நகரில் இருந்து ஊர்காவற்றுறை நோக்கிச் சென்ற பேரணியில் இந்தச் சப்பாத்து எடுத்துச் செல்லப்பட்டது. பேரணியின் முடிவில் பொதுக்கூட்டம் நடந்தது. அதன் பின்னர் கூடியிருந்த மக்கள் முன்னிலையில் இராணுவச் சப்பாத்துக்கு பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதி ஒருவர் தீ மூட்டினார். அது விளாசி எரிவதை மக்கள் நீண்ட நேரம் பார்த்து நின்றனர்.

அடக்கு முறைக்கும், சமாதான விரோத சக்திகளுக்கும் எதிராக அவர்கள் கோஷமிட்டனர்.

இராணுவச் சப்பாத்து தீயில் எரிவதை படத்தில் காணலாம். (ஐ)



**நேற்றைய பேரணி தொடர்பான மேலும் செய்திகள், படங்கள் 11ஆம், 12 ஆம் பக்கங்களில்.**

## அமைதி காக்குமாறு புலிகள் கோரிக்கை!

மட்டக்களப்பு,ஜூன்28

தீய சக்திகளின் கைக்கூலிகளாகச் செயற்படும் முஸ்லிம் குண்டர்களின் கொடூர செயல்களுக்காக அப்பாவி முஸ்லிம்களுக்கு எந்தவித தீங்கும் செய்யாது அமைதிகாக்குமாறு கிழககு மாகாண தமிழ் மக்களிடம் புலிகள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

கிழக்கில் பரவியுள்ள வன்செயல்களை அடுத்து விடுதலைப் புலிகளின்மட்டு - அம்பாறை அரசியல்துறை நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சிறிலங்கா அரசுடன் பேச்சு மூலம் உரிமை பெறுவதை விரும்பாத சில தீயசக்திகள் முஸ்லிம் குண்டர்கள் சிலரைப் பயன்படுத்தி, தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் பிரச்சினைகளை ஏற்படுத்தி, அப்பாவி உயிர்களைப் பலிகொண்டு தமிழ் பேசும் மக்களின் பொருளாதாரத்தை சிதைக்க எத்தனிக்கின்றன. இதன் தொடக்கமாகவே இன்று (நேற்று) ஒட்டமாவடியில் அப்பாவித் தமிழர்கள் மீது வீசப்பட்ட கைக்குண்டினால் இரு தமிழர்கள் கால்கள் இழக்கப்பட்டும் மேலும் பலர் காயமடைந்தும் உள்ள

(14ஆம் பக்கம் பார்க்க)

### பிரதமரிடம் முறைப்பாடு

மட்டக்களப்பு,ஜூன்28

கிழக்கில் இடம்பெறும் கலவரங்களைக் கட்டுப்படுத்த துரித நடவடிக்கை எடுக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் பிரதமரிடம் கேட்டிருக்கிறார்.

இன ஒற்றுமையை நாம் பேண வேண்டும் அது முக்கியமாகத் தேவை. இது விடயத்தில் அரசியல்வாதிகள் இந்த வன்செயல்களைத் தடுத்து நிறுத்தி, இரு இனங்களும் ஐக்கியத்துடன் வாழக்கூடிய ஒரு சூழலை

(14ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றைய மக்கள் பேரணியை ஒட்டி பண்ணை முதல் ஊர்காவற்றுறை வரை கடற்படை வாபஸ்! பொலீஸார் கடமை!!

யாழ்ப்பாணம்,ஜூன்28

மக்கள் பேரணி நடைபெற்றதை ஒட்டி பண்ணை முதல் ஊர்காவற்றுறை வரையான பிரதேசத்தில் நேற்று கடற்படையினர் வாபஸ் பெறப்பட்டிருந்தனர். பொலீஸார் மட்டுமே பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் பேரணி ஆரம்பித்த துரையப்பா மைதானப் பகுதி, பண்ணை சோதனை நிலையம், அல்லைப்பிட்டிச் சோதனை நிலையம், வங்களாவடிச் சந்தி, ஊர்காவறறுறை ஆகிய பகுதிகளில் பெலீஸாரே பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தப் பகுதிகளில் கடற்படையினரின் பணி வாபஸ் பெறப்பட்டிருந்தது. பண்ணை முதல் ஊர்காவற்றுறை வரையான வீதியில் அமைக்கப்பட்டி

(14ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



...அப்ப சமாதானத்துக்கு குழி பறிக்கிற வேலை கிழக்கில நடக்குது எண்டு சொல்லுங்கோ...

## பேரணிக்குச் செல்லவிடாது மக்களைத் தடுத்த குழு!

யாழ்ப்பாணம்,ஜூன்28

தீவகத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் தாக்கப்பட்டமை உட்பட சமாதானத்துக்கு எதிரான சக்திகளின் நடவடிக்கைகளைக கண்டித்து நேற்று இடம்பெற்ற மக்கள் பேரணியில் கலந்துகொள்ள வேண்டாம் என்று தீவகப் பகுதியில் வீடுவீடாகச் சென்ற தமிழ்க் குழுவினர் மக்களைத் தடுத்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆயினும் புங்குடுதீவு, ஊர்காவற்றுறை, புளியங்கூடல் மற்றும் சரவணைப் பகுதிகளைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் நேற்றைய பேரணியில் கலந்துகொண்டனர்.

நெடுந்தீவில் இருந்தும் பல நூற்றுக்கணக்கான மக்கள் படகுகளில் வந்து பேரணியில் கலந்துகொண்டனர்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பேச்சு நிகழ்ச்சி நிரல் தயாரிப்பதில் தாமதம்!

## அமைச்சரவைப் பேச்சாளர் பீரிஸ் தெரிவிப்பு

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் பேச்சுக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டிருக்கின்றது என்று அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நேற்றுத் தெரிவித்தார்.

அரசும் புலிகளும் ஏற்கும் வகையில் நிகழச்சி நிரல் அமைய வேண்டும் என்பதில் இரண்டு தரப்பினரும் உறுதியாக இருக்கின்றனர் என்றும், நிகழ்ச்சி நிரல் தயாரானவுடன் தாய்லாந்து பேச்சுக்கான திகதி அறிவிக்கப்படும் என்றும் அமைச்சர் பீரிஸ் கூறினார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் பீரிஸ் இவற்றைத் தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தீவுப்பகுதி தாக்குதல்களும், மூதூர் அசம்பாவிதங்களும் சமாதானப் பேச்சுக்கு முட்டுக்கட்டையாக அமையா. அரசாங்கம் திட்டமிட்டபடி சமாதானப் பேச்சுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பேச்சுக்களில் தாமதங்கள் ஏற்படலாம். ஆனால் இடையில் முறிந்து விடக்கூடாது. இவ்விடயத்தில் அரசாங்கம் மிகவும் அவதானத்துடனேயே செயற்படுகின்றது.

யுத்தநிறுத்த மீறல்கள் தொடர்பாக இரு பக்கத்திலுமே பரஸ்பர குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. குண்டுச்சத்தங்களுக்கு இடையில் பழக்கப்பட்டவர்களுக்கு அடிக்கடி 'ரென்சன்' ஏற்படுவது இயற்கை. எனினும் தீவகப்பகுதித் தாக்குதல் தொடர்பாக நீதியான விசாரணைகளை மேற்கொள்ள அரசு விசேட விசாரணைக் குழு ஒன்றை அமைத்துள்ளது.

**மூதூர் சம்பவம்**

மூதூர் சம்பவம் தொடர்பாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஒரு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். இனங்களுக்கிடையில் மீண்டும் பரஸ்பர நல்லுறவை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொதுமக்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் பல தடவைகள் ஆராயப்பட்டு, மாற்றங்கள் செய்யப்பட்டு இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே நோர்வே அரசினால் இறுதியாக்கப்பட்டது. இரண்டு தசாப்தங்களாகப் புரையோடிப் போயுள்ள பிரச்சினைக்கு ஒரே இரவில் தீர்வு கண்டுவிடமுடியாது. பேச்சுக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இரு தரப்பினரும் ஏற்கும் வகையில் நிகழ்ச்சி நிரல் அமைய வேண்டும் என்பதில் விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் உறுதியாக இருக்கின்றன. பொதுவான நிகழ்ச்சி நிரல் தயாரானவுடன் தாய்லாந்து பேச்சுக்கான திகதி அறிவிக்கப்படும்.

இப்பேச்சு இடையில் முறிந்து விடக்கூடாது. தொடர்ச்சியாக நடைபெற்று நிரந்தரத்தீர்வு காணவேண்டும் என்பதே எமது நோக்கம். எனவே, தாமதம் ஏற்படுவதை தவறாக எடைபோட்டு விடக்கூடாது எனவும் அமைச்சர் பீரிஸ் கூறினார். (ஐ-10)

# அத்தியாவசிய சேவைகள் தொடர்பான ஆணைக்குழு

## பிரதமரின் யோசனைக்கு அங்கீகாரம்

கொழும்பு,ஜூன்28

அத்தியாவசியப் பொருள்கள், சேவைகள் தொடர்பான விசேட பொது மக்கள் பாவனைப்பொருள் ஆணைக் குழு ஒன்று விரைவில் நியமிக்கப்படவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பாகச் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நீர், மின்சாரம் மற்றும் காஸ் போன்ற அத்தியாவசிய சேவைகளைப் பொது மக்களுக்கு சீரான முறையில் வழங்குவதற்கு இந்த ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும் என்று அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய சேவைகளைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு இந்த ஆணைக் குழுவுக்கு வழங்கப்படும் என்றும், இது தொடர்பான ஏற்பாடுகள் விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-10)

## கனடா கோஷ்டி மோதல் சம்பவம்:

# இளைஞனின் துண்டிக்கப்பட்ட விரல்கள், கை மீள இணைப்பு!

ரொறன்ரோ,ஜூன்28

கனடாவில் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற தமிழ் இளைஞர்கள் கோஷ்டி மோதலில் இரு இளைஞர்களின் துண்டிக்கப்பட்ட விரல்கள், கை ஆகியவை வெற்றிகரமாக மீளப் பொருத்தப்பட்டுள்ளன. சுமார் 14 மணித்தியால மருத்துவச் சிகிச்சையின் பின இவை பொருத்தப்பட்டன என்று ரொறன்ரோ புலனாய்வுப் பொலீஸ் அதிகாரி பில் நோர்ன் பேகர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக 17 வயது இளைஞர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் ஸ்காப்ரோவில் உள்ள அவரது வீட்டில் வைத்துக் கடந்த 24 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருக்கிறார். கொலை முயற்சி, பயங்கர ஆயுதங்களை வைத்திருந்தது, அவை மூலம் தாக்குதல் நடத்தியது ஆகிய குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டிருக்கின்றன. இந்தத் தாக்குதலுக்கும் கடந்த 16 திகதி கனடாவில் இடம்பெற்ற மோதலுக்கும் சம்பந்தம் இருப்பதாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதலில் இரு இளைஞர்கள் பயங்கரமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒருவரின் ஈரலில் ஒரு பகுதி அகற்றப்பட்டிருக்கிறது. மற்றையவரின் ஈரலில் துளைகள் ஏற்பட்டிருக்கின்றன. (ஐ)





நேற்று நடைபெற்ற மக்கள் பேரணியில் பங்குபற்றிய வாகன அணிகள் தீவகம் நோக்கிச் சென்ற காட்சி. பொலீஸார் காவல் கடமையில் ஈடுபட்டிருப்பதையும் காணலாம்.







துருக்கியுடனான அரையிறுதி ஆட்டத்தின்போது ரொனால்டோவின் பெயரைத் தாங்கியுள்ள ரசிகர்கள்.

# உலகின் பார்வை 'இவர்' பக்கம்

சியோல்,ஜூன்28

இம்முறை உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெறுவதற்கு தடுமாறிய பிரேஸில், பின்னர் மிகச் சிறப்பாக தனது திறமையை வெளிப்படுத்தி இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது. அந்த அணியின் நட்சத்திரம் ரொனால்டோ தற்போது மீண்டும் எதிர்பார்ப்பிற்குரிய ஹீரோவாகியிருக்கின்றார்.

அவர் அடித்த அற்புதமான கோல் மூலமே பிரேஸில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. இதனால் இறுதியாட்டத்திலும் அவர் சிறப்பாக ஆடி தன் அணிக்கு வெற்றியைத் தேடித் தருவார் என்று பிரேஸில் ரசிகர்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் இருக்கின்றனர்.

1998இல் பிரான்ஸில் நடந்த உலகக் கிண்ணத்தின் போதும் இவ்வாறான பெரும் எதிர்பார்ப்பிற்குரிய வீரராக ரொனால்டோ இருந்தார். ஆனால இறுதியாட்டத்தின்போது அவர் காயமடைந்திருந்தார். இருந்தாலும் களத்தில் இறங்கி விளையாடினார். ஆனால் அவரால் சிறப்பாக ஆட முடியவில்லை. அந்த ஆட்டத்தில் பிரேஸில் தோல்வியடைந்தது.

தற்போது பிரேஸில் அணியில் பல நட்சத்திரங்கள் இருந்து போதும் ரொனால்டோவே எதிர்பார்ப்பிற்குரிய நபராகியிருக்கிறார். கடந்த முறை ஏற்பட்ட தோல்விக்குப் பழிதீர்த்து, இம்முறை கிண்ணத்தைக் கைப்பற்றுவாரா என்பதே ரசிகர்களின் எதிர்பார்ப்பு.

இதுவரை அதிக கோல்களை அடித்த வீரராகவும் அவர் இருக்கிறார். 6 கோல்களை அவர் அடித்துளளார். அதிக கோல்களை அடிக்கும் வீரருக்கான தங்க 'பூட்ஸ்' அவருக்குக் கிடைப்பதற்கான சாத்தியங்களும் அதிகம் இருக்கின்றன. (ம)

# தங்கப் பந்து பட்டியலில் பிரேஸில் வீரர் நால்வர்

சியோல்,ஜூன்28

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் மிகச் சிறப்பாக விளையாடும் வீரருக்கு 'அடிடாஸ்' தங்கப் பந்து விருது வழங்கப்படுவது வழமை. இம்முறை அந்த விருதைப் பெறுவதற்கான வீரர்களின் தரவரிசைப் பட்டியலில் முதல் 10பேரில், பிரேஸில் வீரர்கள் முன்னணியில் இருக்கின்றனர்.




நான்கு பிரேஸில் வீரர்கள் இந்த விருதுக்காக சிபாரிசு செய்யப்பட்டுள்ளனர். ரெனால்டோ, ரிவால்டோ, ரொனால்டினோ மற்றும் ரொபர்டோ கார்லோஸ ஆகியோரே அந்த நால்வருமாவர். ஜேர்மனிய வீரர் மைக்கல் பல்ளக் இந்தப் பட்டியலில் முதல் இடத்தில் இருக்கிறார். ஆனால் தென்கொரியாவுடனான அரையிறுதியில் முறைகேடாக விளையாடியமைக்காக அவருக்கு இரு தடவைகள் மஞ்சள் அட்டை காட்டப்பட்டதால் அவர் இறுதிப் போட்டியில் ஆடமாட்டார். ஜேர்மனிய கோல் காப்பாளர் ஒலிவர் கானும் இந்தப் பட்டியலில் முன்னணியில் இருக்கின்றார்.

பட்டியலில் முதல் 10 இடத்தில் இருப்பவர்கள் விவரம்:

மைக்கல் பல்ளக் (ஜேர்மனி)
கார்லோஸ் (பிரேஸில்)
டியோவ் (செனகல்)
கிரேரோ (ஸ்பெயின்)
முயுங் - பூ (கொரியா)
ஒலிவர் கான் (ஜேர்மனி)
ரிவால்டோ (பிரேஸில்)
ரொனால்டோ (பிரேஸில்)
ரொனால்டினோ (பிரேஸில்)
ஹசன் சாஸ் (துருக்கி)

(ம)

# வெல்பவர் யாரோ?

சியோல்,ஜூன்28

உலகக் கிண்ண இறுதி ஆட்டம் இம்மாதம் 30ஆம் திகதி பிரேஸில் மற்றும் ஜேர்மனி அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ளது. இதில் இரண்டு அணிகளுமே திறமையான அணிகள். பல்வேறு நாட்டு அணிகளைத் தோற்கடித்தே இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளன. இவற்றில் எந்த அணி வெற்றிபெறும் என்பதே இன்றுள்ள கேள்வி. இது குறித்து இப்போதே பல ஆருடங்கள் கூறப்படுகின்றன.

கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ள ஆருடம் இது:-

பிரேஸில் இறுதியாக 1994இல் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. அதற்த முன்னர் 1970 இல் வெற்றிவாகைசூடியது. இந்த இரு ஆண்டுகளின் கூட்டுத்தொகை (1970 + 1994) 3964 ஆகும்.

ஆர்ஜென்ரீனா 1986இல் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. அதற்கு முன்னர் 1978இல் வெற்றிவாகைசூடியது. இந்த இரு ஆண்டுகளின் கூட்டுத்தொகையும் கூட 3964 ஆகும்.

ஜேர்மனி 1990இல் ஒருதடவையும் அதற்கு முன்னர் 1974 இல் ஒரு தடவையும் கிண்ணத்தைக் கைப்பற்றியது. இந்த இரு ஆண்டுகளின் கூட்டுத்தொகையும் கூட 3964 ஆகும்.

இவ்வெற்றிகளின் அடிப்படையில பார்த்தால், இம்முறை பிரேஸில் வெற்றிபெறவே அதிக சந்தர்ப்பங்கள் உண்டு. பிரேஸில் வெற்றிபெற்ற ஆண்டுகளின் கூட்டுத்தொகையான 3964 இல் இருந்து 2002 ஆம் ஆண்டைக் கழித்தால் விடை 1962 ஆகும். எனவே 1962இல் உலகக் கிண்ணத்தை வென்ற அணியே இம்முறையும் வெற்றிபெறுவதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றது என்கிறது அந்தப் பத்திரிகை. பொறுத்திருந்து பார்ப்போம். (ம)

உதயன்

## அமெரிக்கப் பார்வையில் இன்று அரபாத்; நாளை?

சுதந்திர பலஸ்தீனத்தை அடைய நீண்ட காலமாகத் துடித்துக்கொண்டிருக்கும் அந்நாட்டு மக்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஆசைகாட்டியிருக்கிறார். எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

"சுதந்திர பலஸ்தீனம் வேண்டுமானால் உங்களுடைய தற்போதைய தலைமையை (யசீர் அரபாத்தை) நீக்குங்கள். பயங்கரவாதத்தை அனுமதிக்காத தலைமையைத் தெரிவு செய்யுங்கள்.

அப்போது நீங்கள் உங்கள் லட்சிய பூமியை அடைய அமெரிக்கா உங்களுக்குப் பக்கத் துணையாக இருந்து காரியம் சாதித்துத் தரும்"

இவை ஜனாதிபதி புஷ்ஷின் ஆசை வார்த்தைகள்.

"தேர்தலில் தற்போதைய தலைமையை நீங்கள் மீண்டும் தெரிவுசெய்வீர்களேயானால் உங்கள் சுதந்திர பலஸ்தீனம் வெறும் கனவாகவே இருக்கும்" இது ஜனாதிபதி புஷ் பலஸ்தீன மக்களுக்கு விடுத்துள்ள எச்சரிக்கை.

ஜனாதிபதி புஷ் வெளியிட்டுள்ள இந்தக் கருத்துக்களுக்கு எதிர்பார்த்த ஆதரவு உலக நாடுகளில் கிடைக்கவில்லை. எதற்கும் அமெரிககாவோடு ஒத்துப்போகும் பிரிட்டன் கூட புஷ்ஷின் இந்தக் கருத்துக்களுக்கு உடன்பாடாக இல்லை. "பலஸ்தீன மக்கள் தாம் விரும்பியவரைத் தலைவராகத் தெரிவுசெய்யும் உரிமை உடையவர்கள். அதில் எவரும் தலையிட முடியாது" என்று கூறிவிட்டார் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர்.

கனடாவும் அப்படித்தான், ஜனாதிபதி புஷ்ஷின் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. -

பலஸ்தீனப் பிரச்சினை உருவாகி இறுகிப் போயிருப்பதற்கு அமெரிக்கா மூல காரணமாக இருந்தது என்பது உலகின் அபிப்பிராயம். அதற்குப் பிராயச்சித்தம் தேடுவதற்குப் பதிலாக அமெரிக்கா அங்கே நச்சு விதைகளை விதைக்கத் தொடங்கியிருப்பதுதான் விந்தை.

உலகின் எந்த மூலையில் என்ன நடந்தாலும் அதில் மூக்கை நுழைக்கும் பழக்கம் அமெரிக்காவை இறுகப் பற்றிக்கொண்டு விட்டது.

மற்ற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவதற்கு அமெரிக்காவுக்கு என்ன உரிமையிருக்கிறது.

உலக வல்லரசு என்ற பலம் எல்லா நாடுகளிலும் குதிரை விடுவதற்கு 'லைசென்ஸா'?

"அமெரிக்கா ஒரு குள்ளநரி. ஆனால், அந்த நரியிடம் ஏமாறும் காக்கை அல்ல பலஸ்தீன மக்கள். தலைவர் யஸீர் அரபாத் பலஸ்தீன மக்களின் உயிர் நாடியாக விளங்குபவர். அவரைத் தலைமைப் பதவியிலிருந்து விலக்கும் தற்கொலை முயற்சியில் அவர்கள் ஒருபோதும் ஈடுபடமாட்டார்கள்" என்கிறார் அரசியல் அவதானியும் தமிழீழ விடுதலை அணியின் பொதுச் செயலாளருமான மா.க.ஈழவேந்தன்.

'ஆதிக்க வெறிகொண்ட அமெரிக்கா 'நாளை பிரபாகரனை நீக்குங்கள், தமிழீழம் மலர நாம் துணைநிற்போம்' என்று இங்குள்ள தமிழ் மக்களையும் ஏமாற்ற முயலக்கூடும்.

வியட்நாமில் வெறியாட்டம் ஆடிய அமெரிக்கா, சோவியத் யூனியனைச் சிதறடித்த அமெரிக்கா, பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையில் சிண்டுமுடிந்துவரும் அமெரிக்கா இலங்கையைச் சும்மா விட்டுவிடுமா?

பிரபாகரன் இல்லாவிட்டால் தமிழர் பிரச்சினையை வேறுவிதமாகச் சுலபமாகத் தீர்த்துவிடலாம் என்ற சிந்தனையில் இருக்கும் பேரினவாதம், அமெரிக்காவின் சதிக்குத் துணைபோகலாம். தமிழ் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று முன்னெச்சரிக்கை செய்கிறார் ஈழவேந்தன்.

அமெரிக்கா பற்றிய இந்த எச்சரிக்கை உலகெங்கும் உள்ள எல்லா இன மக்களுக்கும் பொருந்தும்.

## ஓட்டோ சாரதியைத் தாக்கியோர் அரசியற்றுறையினரிடம் சிக்கினர்!

யாழ்ப்பாணம்,ஜூன்28

வவுனியாவில் இருந்து வாடகைக்கு அமர்த்தி வந்த ஓட்டோவின் சாரதியை சாவகச்சேரியில் வைத்துத் தாக்கியதாகக் கூறப்படும் இரு இளைஞர்களையும் விடுதலைப் புலிகளின் அரசியற்றுறையினர் கண்டுபிடித்ததாகவும் -

அவர்களிடமிருந்து வவுனியாவிலிருந்து சாவகச்சேரிவரையிலான ஓட்டோ கட்டணத்தை சம்பந்தப்பட்ட ஓட்டோ சாரதி பெற்றுக்கொள்ள உதவியதாகவும் - கூறப்படுகிறது.

மரணச்சடங்குக்குச் செல்வதாகக்கூறி வவுனியாவிலிருந்து தனது ஓட்டோவில் வந்த அந்த இளைஞர்கள் தன்னைத்தாக்கி ஓட்டோவைக் கடத்த முயற்சித்ததாக சங்கத்தானையில் உள்ள அரசியல் பிரிவுப் பணிமனையில் சாரதி முறையிட்டிருந்தார். இதனையடுத்து சம்பந்தப்பட்ட திருமலை உப்புவெளியைச் சேர்ந்த இளைஞரையும் மீசாலை மேற்கைச் சேர்ந்த மற்றோர் இளைஞரையும் அரசியல் பிரிவினர் மீசாலை மேற்கில் உள்ள ஒரு வீட்டில் வைத்து அடையாளங்கண்டனர். அவர்களிடமிருந்து ஓட்டோ கட்டணத்தை மேற்படி சாரதி அறவிட்டுக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)




### தாக்குதல்களைத் தடுக்க முடியாவிட்டால்

# புலிகள் ஆயுதம் வைத்திருக்க அனுமதி வழங்கப்பட வேண்டும்

## திருகோணமலைத் தமிழர் அமைப்புக்கள் வேண்டுகோள்

திருகோணமலை,ஜூன்28

அரசியல் பணிகளுக்காக இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்குள் வந்துள்ள விடுதலைப் புலிகள் மீதான தாகுதல்களைத் தடுக்கத் தவறும் பட்சத்தில் தங்கள் தற்பாதுகாப்புக்காக விடுதலைப் புலிகள் ஆயுதங்களை எடுத்துவர அனுமதிக்க வேண்டும்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் திருகோணமலை தமிழர் அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், காந்தி சேவா சங்கம், ஓட்டோ சாரதிகள் சங்கம், மீனவர் அமையம் உட்பட திருகோணமலை மாவட்ட தமிழர் அமைப்புகள், திருகோணமலை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஊடாக அனுப்பிய மகஜரிலேயே இந்த வேண்டு கோள் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அரசுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையை அடுத்து விடுதலைப் புலிகள் தங்களிடமுள்ள ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

இரு தரப்பினருக்கும் இடையே தாய்லாந்தில் சமாதானப் பேச்சு ஆரம்பமாகும் திகதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை.

மனநிறைவற்ற சில சக்திகள், இனங்களுக்கு இடையே கருத்து வேறுபாடுகளை உருவாக்கி, சமாதான நடைமுறையைக் குழப்புவதற்கு முயற்சித்து வருகின்றன.

விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட மாணவர் பிரிவு பொறுப்பாளர் காருண்யாவும் அவரது சகா ஒருவரும் திருகோணமலை மத்திய வீதி பொலீஸ் சாவடியில் பொலீஸாரால் காரணம் இன்றிக் கைது செய்யப்பட்டனர். எல்லாவற்றிற்கும் இதுதான் ஆரம்பம். இச்செயல் அவர்களை அவமானப்படுத்தும் நோக்குடன் செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

இதனைத் தொடர்ந்து திருக்கோயில் என்னும் இடத்தில் பொலீஸ் அதிரடிப் படை போக்குவரத்துக் குற்றங்களை மீறியது என்ற குற்றத்தின் பேரில் விடுதலைப் புலிகளின் வைத்திய பிரிவைச் சேர்ந்த ஆண் உறுப்பினர் ஒருவரைத் தாக்கி பின்னர் கைதுசெய்த சம்பவம் இடம்பெற்றது. போர் நிறுத்த உடன்படிக்கையை மீறிய பாரதூரமான மீறல்சம்பவம் வேலணையில் இடம்பெற்றது. அங்கு வைத்து விடுதலைப் புலிகளின் உள்ளூர் அரசியல்த் தலைவர்கள் தாக்கப்பட்டனர். பின்னர் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களின் உதவியுடன் அவர்களை கடற்படையினர் கடத்திச் செல்லவும் எத்தணித்தனர். சரியான நேரத்தில் பொதுமக்கள் தலையிட்டதால் பெரிய நெருக்கடி ஏற்படுவது தவிர்க்கப்பட்டது. மூதூர், பச்சனூரில் றோமன் கத்தோலிக்க மதத்தவருக்குரிய கொங்கிறீற்றினால் செய்யப்பட்ட சிலுவைகள் முரட்டுத்தனமான முறையில் அழிக்கப்பட்டன. இது சமாதானத்துக்கு எதிரானவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

ஆகப்பிந்திய சம்பவமாக மூதூர் நகரில் ஆயிலியடியில் விடுதலைப் புலிகள் அரசியல் அலுவலகம் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டது. ஜிஹாத் குழுவின் தலைவர் ஹக்கீம் என்பவர் தலைமையில் அவரது ஒஸாமா கோஷ்டி என்று அழைக்கப்படுபவர்களால் விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகத்துக்கு பலத்த சேதம் ஏற்படுத்தப்பட்டது. விசேடமாகத் தற்போதைய நிலைவரத்தில் இது முழுமையாகத் தேவையற்றதாகும். இத்திட்டமிடப்பட்ட தாக்குதல்களை மேற்கொண்ட குற்றவாளிகளின் நோக்கம் தற்போதைய சமாதான முயற்சியை முறியடிப்பதும் அரை நூற்றாண்டுகால அரசியல் வரலாற்றில் தமிழ் மக்கள் தங்களின் நியாயமான அபிலாஷைகளை பூர்த்திசெய்யக் கூடிய தீர்வைக் காணும் வாய்ப்பை மறுப்பதுவும் ஆகும்.

ஆகவே, தாங்கள் இத்தாக்குதல்களை நடத்திய குற்றவாளிகளைக் கண்டுபிடித்து சட்டத்தின்முன் நிறுத்த தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்றும் -

இதுபோன்ற சம்பவங்கள் இனிமேலும் நடக்காதிருக்க உறுதிசெய்ய வேண்டும் என்றும் -

அல்லாத பட்சத்தில் தங்களுடைய அலுவலகங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், ஆயுதங்களை வைத்துக் கொள்வதற்கும் விடுதலைப் புலிப் போராளிகளுக்கு அனுமதிப்பதே முறையானதாகவே இருக்கும் என்றும் -

அதில் தெரிவிக்கப்பட்டது.

(ஒ)

# புதிய மின்பிறப்பாக்கிகள் மூலம் அடுத்த வாரம் மின்சார உற்பத்தி

## பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்படும்

யாழ்ப்பாணம்,ஜூன்28

அண்மையில் கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டு சுன்னாகத்தில் பொருத்தப்பட்டுள்ள புதிய மின்பிறப்பாக்கிகள் பரீட்சார்த்தமாக ஜூலை முதலாம் திகதியிலிருந்து இயக்கப்பட்டு மின்சாரம் விநியோகிக்கப்படவுள்ளதாக பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சார்த்த நடவடிக்கை தொடர்பாக மின் இணைப்புக்களில் அவசர திருத்த வேலைகள் மேற்கொள்ள இருப்பதாகவும் -

ஆகவே, திருத்த வேலைகளுக்காக நாளை சனிக்கிழமையும், நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8மணி முதல் பிற்பகல் 5மணிவரையும் குடாநாடு முழுவதும் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டிருக்கும் எனவும் -

அவர் மேலும் தெரிவித்துள்ளார். மின்பிறப்பாக்கிகள் பிறப்பிக்கும் மின்சாரத்தை விநியோகிப்பதற்கான மின்மாற்றிகளில் 6மட்டுமே தற்போது எடுத்துவரப்பட்டுள்ளன. இரு மின்பிறப்பாக்கிகளுக்கு ஒரு மின்மாற்றி என்ற அடிப்படையில் 18 மின்பிறப்பாக்கிகளுக்கும் மொத்தம் 9 மின்மாற்றி கள் தேவை. ஆகவே, வந்துள்ள 6 மின்மாற்றிகளைக் கொண்டு 12 மின்பிறப்பாக்கிகளில் பரீட்சார்த்த மின்சார உற்பத்தி மற்றும் விநியோகம் என்பன மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேசமயம், மற்றய 3 மின்மாற்றிகளும் அடுத்த வாரமளவில் எடுத்தவரப்பட்டுவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-ரி)

### நாளை

ஆனி 15
சனிக்கிழமை
(29.06.2002)
திதி : பஞ்சமி முழுவதும் பின்னிரவு 3.20 வரை.
நட்சத்திரம்: அவிட்டம் பிற்பகல் 3.58 வரை.
சுபநேரம்: 2.56 - 4.26
ராகுகாலம்: 8.56 - 10.26
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

துன்பத்தில் இருப்பவருக்கு அவரைத் தவிர உலகில் உள்ள மற்றைய அனைவரும் சந்தோசமாக இருப்பதாகவே தோன்றும்.

## தொகுதிவாரி தேர்தல் முறையை ஏற்க அமைச்சர் ஹக்கீம் மறுப்பு!

கொழும்பு,ஜூன்28

தொகுதி வாரியான தேர்தல் முறை மீண்டும் ஏற்படுவதை ஸ்ரீலங்கா முஸலிம் காங்கிரஸ் எதிர்க்கும் என்று அதன் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

விகிதாசார பிரதிநிதித்துவத் தேர்தல் முறை சிறுபான்மை இன மக்களுக்கு மிகவும் பயன் அளிக்கக் கூடியது என்றும்-

அம்முறையை நீக்கி, தொகுதி வாரியான தேர்தல் முறையைக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை ஏற்க முடியாதென்றும் -

அவர் கூறியுள்ளார்.

அந்த முறையை முஸ்லிம் காங்கிரஸ் வன்மையாக எதிர்க்கும் என்றும் அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவித்தார்.

(ஒ-4)

கண்கண்ட தெய்வங்கள் குருமாரே

# சிவாச்சார்யாருக்கு வணக்கம் செலுத்துவது எமக்கு உயர்ந்த பலனைப் பெற்றுத்தரும்

## அமைச்சர் மகேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜுன்28

குருமாரே கண்கண்ட தெய்வங்கள். எனவே இந்துக் குருமாரை வழிபடுவது சிவனை வழிபடுவதிலும் உயர்ந்த பலனைப் பெற்றுத்தரும்.

இவ்வாறு தெரிவித்தார் இந்துசமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன்.

இந்துசமய விவகார அமைச்சும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த சிலப்பதிகாரம் தொடர்பான ஆய்வரங்கு கடந்த வார இறுதியில் 3 தினங்கள் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. இந்த ஆய்வரங்கின் ஒரு பகுதியாக இந்துக் குருமார் கௌரவிப்பும் இடம்பெற்றது. இந்தக் கௌரவிப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் ஆலயத்திற்குச் சென்று வழிபடுகின்றோம். ஆனால், மூலஸ்தானத்தினுள் செல்லும் அந்தஸ்தினைப் பெறவில்லை. இவ்வாறு மூலஸ்தானம் வரை சென்று இறைவனை தொட்டு வழிபாடியற்றும் தகுதி சிவாச்சாரியார்களுக்கே உண்டு. ஆதலால் அவர்களை வழிபடுவது இறைவனை வழிபடுவதிலும் சிறப்பானதாகும்.

எனது சிறுவாழ்வு அனுபவங்கள் இதனை எடுத்துக்காட்டுகின்றன. சிவாச்சாரியார் வழிபாடு பல வழிகளிலும் உயர்வைப் பெற்றுத்தரக் கூடியது.

சிவாச்சாரியார் வழிபாடு பற்றி இந்து மதத்தின் பல்வேறு நூல்களும் விளக்கமளித்துள்ளன. இந்து மக்களின் வாழ்வில் குருமார்களும், சிவாச்சாரியார்களும் பெரும்பங்காற்றி வருகின்றனர்.

உலகின் நன்மைக்கெனத் தினமும் இறைவனிடம் ஆசிவேண்டி நிற்பவர்கள் சிவாச்சாரியார்களே.

இந்தச் சிவாச்சாரியார்களின் மூலம் ஏழைகளுக்கு உதவும் திட்டமொன்றினை அறிமுகப்படுத்த எமது அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இத்தகைய செயற்பாடுகளின் மூலம் இந்துமதத்திலே பற்றுள்ளதும், வறுமையற்றதுமான ஒரு சமுதாயத்தினைக் கட்டி எழுப்ப முடியும் - என நான் நம்புகின்றேன்.

இந்து ஆலயங்கள் சமய விவகாரங்களுடன் நின்றுவிடாது ஏழை மக்களின் மத்தியில் பல்வேறு சேவைகளை ஆற்றுவதற்கு முன்வரவேண்டும். இதன் மூலமே சமய வாழ்வை சமூக வாழ்வுடன் இணைக்கமுடியும் - என்றார் அமைச்சர்.

பல்லாண்டுகளாக நடைபெற்ற போரின் விளைவாக இந்நாட்டில் இந்து சமயமும் இந்து சமுதாயமும் சீர்குலைந்துவிட்டன. பல்லாயிரக் கணக்கான இந்துக் கோயில்கள் இடிபாடாகி பாழடைந்துவிட்டன. தொன்மைச் சிறப்புடையதும் பாடல் பெற்ற தலங்களில் ஒன்றாகியதுமான திருக்கேதீஸ்வரம் சேதமடைந்துவிட்டது; அங்கே பூசைகள் நடைபெறுவதில்லை. ஆலயக் கதவுகள் மூடப்பட்டுள்ளன. புனித ஷேத்திரங்களான மாவிட்டபுரம் கந்தசாமி கோயில், கீரிமலை சிவன் கோயில், செல்வச்சந்நிதி முதலியன பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணத்திலும் வெருகல் சித்திரவேலாயுத சுவாமி கோயில் போன்ற ஆலயங்கள் அடியார்கள் சென்றணுக முடியாத நிலையில் உள்ளன. இவ்வாறு பாதிக்கப்பட்ட ஆலயங்கள் பல நூற்றுக் கணகில் உள்ளன. அவற்றின் திருப்பணி வேலைகளுக்கு கோடானு கோடி பணம் தேவைப்படும். அந்தப் பொறுப்பை மேற்கொள்ளும் தகைமை எமது சமூகத்திற்கு இல்லை. பெரும்பாலான சைவர்கள் ஊரிழந்து தொழில் இழந்து அகதி நிலையை அடைந்துவிட்டார்கள். ஆறுமுக நாவலர் அவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே சைவசமயத்திற்கு ஏற்படும் இடர்களை கண்டு, மக்கள் மத்தியிலே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு யாழ்ப்பாண சமயநிலை என்ற ஒரு சிறிய நூலை வெளியிட்டார். அன்றுடன் ஒப்பிடும் இடத்து இன்று காணப்படும் நிலை மிகவும் அவலமானது.

இந்து சமயத்தவர்கள் எதிர்நோக்கும் இன்னல்கள், இடிபாடுகள், அழிபாடுகள், இடப்பெயர்ச்சி, அகதி நிலை என்பவற்றோடு மட்டும் நின்றுவிடவில்லை. இந்து சமயத்தைக் காப்பதற்கு இந்த நாட்டு அரசாங்கத்தையோ சுவதேச அமைப்புகளையோ முழுவதுமாக நம்பியிருக்க முடியாது. இந்த நாட்டிலுள்ள இந்து சமுதாயம் விழிப்புணர்ச்சி பெறவேண்டுமானால், இப்பொழுது நடைபெறுகின்றன பற்றி தெளிவான புரிந்துணர்வைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். எனது அமைச்சும் அதிலடங்கியுள்ள இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் அரசாங்கத்திடம் இருந்து சொற்பமாகக் கிடைக்கும் மானியங்களை இந்து சமய அபிவிருத்திகளுக்கு இயன்ற வரையில், மிகுந்த பயன் ஏற்படக் கூடிய வகையில் செயற்படுவதற்கான திட்டங்கள் இப்பொழுது உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றால் சமுதாயமானது முழுமையான பயனைப்பெறுவதற்கு உங்களுடைய மனப்பூர்வமான ஒத்துழைப்பும் ஆதரவும் தேவைப்படுகின்றன்.

இந்துசமயத்தையும் கலாசாரத்தையும் விருத்தி செய்வதற்கென்று 1985ஆம் ஆண்டிலே இந்து கலாசார நிலையம் நாடாளுமன்றத்தினால் நிறுவப்பட்டுள்ளது. ஆயினும் துரதிர்ஷ்ட வசமாக அந்நிறுவனம் அணமைக்காலம்வரை செயற்படவில்லை. நான் அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு அந்நிறுவனத்தை இயக்குவதற்கு புதிய ஆளுநர்சபை ஒன்றை நியமித்துள்ளேன். ஏற்கனவே அந்தசபை கூடி நிறுவனத்தின் இலக்குகளை அடைவதற்கு வேண்டிய தீர்மானங்களை மேற்கொண்டுள்ளது.

1982ஆம் ஆண்டிலே முதலாவது உலக இந்துமகாநாடு இலங்கையில் நடைபெற்றது. அதனை நடத்திய சிறப்பு இந்துசமய விவகார அமைச்சுக்குரியதாகும். இரண்டாவது உலக இந்து மாநாட்டினை 2003ஆம் ஆண்டின் முற்பகுதியிலே நடத்துவதற்கு தீர்மானித்துள்ளோம். அதற்கு வேண்டிய ஒழுங்குகள் நடைபெறுகின்றன. அந்த உத்தேச மாநாடு ஆராய்ச்சி பூர்வமானதாகவும். இந்து சமயத்தினதும் கலாசாரத்தினதும் உன்னதமான பண்புகளை நாட்டவர்க்கும் உலகோருக்கும் உணர்த்த[illegible]லதாகவும் அமையும் என்று [illegible] கருதுகின்றோம். அது இந்த[illegible]டு இந்துக்களிடையே உண[illegible] பூர்வமான சிந்தனைகளையும் அறிவியல் ரீதியான சாதனைகளையும் உருவாக்குவதற்கு ஏதுவாயிருக்கும் - என்றார் அமைச்சர்.

சிலப்பதிகார ஆய்வரங்கின் மூன்று நாள்களும் சுமார் 150 இந்துக் குருமார் பொன்னாடைபோர்த்துக் கௌரவிக்கப்பட்டனர். (எ-12)

### யுத்தத்தால் இப்படியும் பாதிப்பு!

தென்மராட்சி,ஜுன்28

பளை வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலை யுத்தத்தினால் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ளதால் இப்பாடசாலையில் வைக்கப்பட்டிருந்த பரீட்சைப் பெறுபேற்று அட்டவணைகளும் அழிந்துள்ளன.

இதனால் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பலர் தமது பெறுபேற்று அட்டவணை இல்லாததால் தொழில் வாய்ப்பு மற்றும் உயர்கல்வி வாய்ப்புகளை பயன்படுத்த முடியாமல் உள்ளனர்.

இதனையடுத்து,

1992ஆம் ஆண்டு தொடக்கம் 1999ஆம் ஆண்டு வரை நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைகள், ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைகள் ஆகியவற்றின் பெறுபேறுகளை பரீட்சைத் திணைக்களத்திடமிருந்து பெற்று மாணவர்களுக்கு வழங்குமாறு போர் அழிவால் மிகவும பாதிக்கப்பட்ட பச்சிலைப்பள்ளி மேற்கு பிரதேசத்தின் மக்கள் ஒன்றியத்தினர் தென்மராட்சி கல்வி வலயப் பணிப்பாளரைக் கோரியுள்ளனர். (ஓ-117)


## இலங்கை மின்சார சபை
யாழ்.பிரதேச அலுவலகம்

**மின்தடை பற்றிய அறிவித்தல்**

29-06-2002, 30-06-2002 சனி, ஞாயிறு தினங்களில் அவசர பராமரிப்பு வேலைகள் காரணமாக யாழ்.குடாநாட்டில் காலை 8.00 மணிதொடக்கம் மாலை 5.00 மணிவரை மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்பதை அறியத்தருகிறேன்.

2002.07.01 ஆம் திகதியிலிருந்து புதிய மின்பிறப்பாக்கிகள் மூலம் பரீட்சார்த்த அடிப்படையில் சில தினங்களுக்கு மின்வீநியோகம் செயயப்படவிருக்கிறது என்பதையும் சகல மின்பாவனையாளர்களுக்கும் அறியத் தருகின்றேன்.

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றேன்.

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ்.பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

(C/22725)

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்"
இலங்கை மின்சார சபை.



## VEMBADI GIRLS' HIGH SCHOOL PRIZE GIVING & FOUNDER'S DAY

**Will be held on Saturday the 29th June 2002 at 9.45 a.m. in the**

MABEL THAMBIAH HALL

Chief Guest: Mrs.Janaki Balakrishnan,
M.A.Sc.,P.Eng.
*(Project Engineer, Toronto - Hydro)*

Parents, Old Girls and Well wishers are Cordially invited.

(C/22724) Principal, Staff & Students.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 11 - 10 - 1929



உதிர்வு 28 - 06 - 2001

### திருமதி பாவிலுப்பிள்ளை செபமாலையம்மா

எங்கள் அன்புத் தாயே! ஆருயிர் அம்மாவே!
நீங்கள் எம்மைப் பிரிந்து ஓராண்டு
சென்றாலும் ஆறவில்லை எம் துயரம்.

*ஊறணி,*
*காங்கேசன்துறை.*
(5316)
உங்கள் பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்றோஸ் எலியாஸ்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்றோஸ் எலியாஸ் (ஓய்வுபெற்ற ஆசிரியை) 22.06.2002 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் செபஸ்ரியாம்பிள்ளை எலியாஸின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும் ஜெயராஜா (அமெரிக்கா), ஜெயராணி (கனடா), பொன்ராஜா (கனடா), வத்ஸலா (ஆசிரியை), நித்தியாணந்தராஜா ( அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சாந்தி (அமெரிக்கா), ஜெயராஜா (கனடா), லூக்காஸ் (விவசாயத் திணைக்களம், மட்டக்களப்பு), தர்சினி (கனடா), விஜயா (அமெரிக்கா) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான பிலிப்புப்பிள்ளை - சூசானாப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியாம்பிள்ளை - விக்ரோறியா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற லூர்தம்மா மற்றும் அல்பிரட்அம்மா, புஷ்பம், மக்டலின் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து, அந்தோனிப்பிள்ளை மற்றும் லாசறஸ், பிரகாசராசா (தலைவர் மரியாயின் சேனை யாழ். கொமிற்சியம்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 27.06.2002 வியாழக்கிழமை யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டு, இறுதி அஞ்சலிக்காக 41, மடம் வீதி இல்லத்தில் வைக்கப்பட்டு, நாளை (29.06.2002) சனிக்கிழமை காலை 9மணிக்கு யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, இரங்கல் திருப்பலியின் பின்னர் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
செ.எலியாஸ் *(கணவர்)*
எம்.ஏ.பிரகாசராசா *(மைத்துனர்)*

*41, மடம் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*
(5312)


## வணிக மாலை அழைப்பு

வணிக மாணவர் மன்றத்தால் நடத்தப்படும் வணிக மாலை நிகழ்வு **(EVENING OF COMMERCE)** இன்று (28.06.2002) வெள்ளிக்கிழமை பி.ப. 300 மணியளவில் CH3 மண்டபத்தில் நடைபெறும்.

*அனைத்து வணிக மாணவர்களையும்*
*கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.*

வணிக மாணவர் மன்றம்,
முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(5314)


## வரவேற்புக் கூட்டம்



தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள மதிப்புக்குரிய

### திரு. வீ.ஆனந்தசங்கரி

(நாடாளுமன்ற உறுப்பினர்)

அவர்களுக்கு இன்று முற்பகல் பத்து மணியளவில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.தலைமைச் செயலகத்தில் வரவேற்புக் கூட்டம் நடைபெறும்.

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**வரவேற்பு ஏற்பாட்டுக் குழு,**
**தமிழர் விடுதலைக் கூட்டணி,**
**யாழ்ப்பாணம்.**

(5298)

# யஸீர் அரபாத் உடனான உறவை அமெரிக்கா முறித்துக் கொள்ளும்!

## வெள்ளை மாளிகை எச்சரிக்கை!!

வாஷிங்ரன்,ஜூன்28

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் உடனான உறவை முறித் துக் கொள்ளும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது. அமெரிக்க அதிப ரின் வெள்ளை மாளிகை அலுவலக அதிகாரி பினெட்சர் அமெரிக்க அர சின் இந்த எச்சரிக்கையை வெளி யிட்டார்.


பலஸ்தீனர்களின் தற்கொலைத் தாக்குல்களைத் தடுத்து நிறுத்த எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்காதிருக்கும் யஸீர் அரபாத் துடன் தொடர்ந்தும் உறவுகளைப் பேண அமெரிக்கா விரும்பவில்லை என்றும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

பலஸ்தீனத் தலைவராக உள்ள அர்பாத்தை மாற்றிவிட்டு புதியவர் ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் புஷ் கூறிய ஆலோசனைக்கு பலஸ்தீனத் தலைவர் யார் என்பதை, பலஸ்தீன மக்கள்தான் ம்டிவு செய்ய வேண் டும் அமெரிக்கா அல்ல -

என்று அரபாத் பதிலடி கொடுத் திருந்தார்.

இதனையடுத்தே அமெரிக்க அதிபர் அலுவலகம் இந்த எச்சரிக் கையை விடுத்துள்ளது.

பலஸ்தீனர்களின் பிரச்சினைக் குத் தீர்வு காணப்படாததாலேயே இஸ்ரேலில் தற்கொலைத் தாக்கு தல்கள் நட்த்தப்படுவதாக பலஸ் தீன தீவிரவாதிகள் தரப்பில் கூறப் பட்டிருந்தது. பலஸ்தீனத் தீவிரவா திகளின் இந்தத் தாக்குதல்களை நியாயப்படுத்தும் வகையில் யஸீர் அரபாத் செயற்பட்டு வருவதாக இஸ் ரேலும் அமெரிக்காவும் குற்றஞ்சாட்டி வந்தன. இந்நிலையில் அமெரிக்கா இத்தகையதோர் எச்சரிக்கையை விடுத்திருப்பது மேற்காசியாவில் பதற்றத்தை அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-9)



றமழா நகரில் உள்ள பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் அலுவலகத்தை முற்றுகையிட்டுள்ள இஸ்ரேலிய டாங்கிகளில் ஒன்று.

# பலூனில் உலகம் சுற்றும் அமெரிக்க கோடீஸ்வரர்!

சாண்டியாகோ,ஜூன்28

அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்டீவ் பாசெட் (வயது-58) என்பவர், பலூன் மூலம் உலகம் சுற்றும் பயணத்தை தொடங்கியுள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல கோடீஸ்வரரான இவர், சிக்காக்கோ நகரில் பங்குச் சந்தைத் தரகராக பணிபுரிகிறார்.

ஏற்கனவே பலூனில் உலகைச் சுற்றிவர ஸ்டீவ் ஐந்து தடவைகள் முயன்றும் தோற்றுப்போனார். தற் போது ஆஸ்திரேலியாவிலிருந்து தனது பயணத்தை தொடங்கியுள்ள இவர் நேற்று வியாழக்கிழமை - பயணத்தை தொடங்கிய ஆறாவது நாளில் - 12 ஆயிரத்து 850 கிலோ மீற்றர்கள் தூரத்தைக்கடந்து தனது பயணத்தைத் தொடர்ந்து கொண்டி ருக்கிறார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை, 16ஆயிரத்து 500 அடி உயரத்தில் மிதந்தபடி ஆண்டெஸ் மலையைக் கடந்து தென் அமெரிக்காவில் உள்ள சிலி நகருக்குள் ஸ்டீவ் நுழைந்தார். (ஒ-9)

# வடகொரிய ஆயுதக் கப்பலை ஜப்பானியக் கடற்படை தகர்த்தது!

டோக்கியோ,ஜூன்28

வடகொரியக் கப்பல் ஒன்று சீனக்கடலில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதை அடுத்து, அதனை ஜப்பான் கடற்படையினர் குண்டு வீசி மூழ்கடித்தனர்.

மூழ்கடிக்கப்பட்ட இக்கப்பலை ஜப்பான் நீர்மூழ்கி நிபுணர்கள் சோதித் துப் பார்த்ததில், அதில் 3 ஆயிரத்து 800 கிலோ மீற்றர்கள் தொலைவு வரை சென்று தாக்கக்கூடிய ஏவு கணைகளும் மற்றும் ஆயுதங்களும் இருந்தது தெரியவந்துள்ளது.

வடகொரியக் கப்பல் ஒன்றில் இவ்வளவு பெருந்தொகையான - பயங்கரமான ஆயுதங்கள் - கண்டு பிடிக்கப்பட்டமை திகைப்பைத் தரு கின்றது என்று ஜப்பான் கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-9)

# அல்கெய்டாவுடன் மோதல்; பாக்.படையினர் உயிரிழப்பு!

இஸ்லாமாபாத்,ஜூன்28

ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதி யில் அல்-கெய்டா தீவிரவாதிக ளுடன் இடம்பெற்ற சண்டையில் 10 பாகிஸ்தானிய படையினர் கொல் லப்பட்டதாக பாகிஸ்தானிய உள் துறை அமைச்சு அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியிலுள்ள வானா அருகே ஆசம் வார்சக் மலைப் பகுதி யில் அல்கெய்டா மற்றும் தலிபான் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து அப் பகுதியில் பாகிஸ்தான் படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது அங்கு பதுங்கியி ருந்த தீவிரவாதிகளுடன் இடம் பெற்ற சண்டையில் 10 பாகிஸ்தான் படையினர் உயிரிழந்ததாகவும் -

சுமார் 4 மணிநேரம் வரை நீடித்த இச் சண்டையில் இரு அல் - கெயடா தீவிரவாதிகள் கொல்லப்பட்டதா கவும் -

பாகிஸ்தானிய உள்துறை அமைச் சகப் பேச்சாளர் தெரிவித்தார்.

அல்கெய்டா போராளி எனக் கூறப்படும் ஒருவர் பாகிஸ்தானியப் படையினரால் கைது செய்யப்பட்ட தாக உறுதி செய்யப்படாத தகவல் கள் தெரிவித்தன. (ஒ-9)

# ஜி.8 அமைப்பின் மாநாட்டை 2006இல் ரஷ்யா நடத்தும்

லண்டன்,ஜூன்28

உலகின் பலம் வாய்ந்த அமைப் பாகக் கருதப்படும் - பணக்கார நாடு கள் அங்கம் வகிக்கும் - ஜி.8 அமைப்பின் 2006ஆம் ஆண்டு மா நாட்டை நடத்தும் பொறுப்பு ரஷ்யா வுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கனடாவில் இடம்பெற்ற ஜி.8 நாடு களின் மாநாட்டில் இந்த முடிவு அறி விக்கப்பட்டது. ஜி.8 அமைப்பில் உள்ள மேற்குலக நாடுகளுடன் இணைந்து ரஷ்யாவை செயற்பட வைக்கும் ரஷ்ய அதிபர் புடினின் முயற்சிக்கு கிடைத்த வெற்றி இது என்று கூறப்படுகிறது. இந்த அமைப் பில் ரஷ்யா முழுத்தகுதியுடைய அங்கத்துவத்தைப் பெற்றுள்ளதா என் பது உறுதி செய்யப்படவில்லை.


அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, ஜப் பான், இத்தாலி, ஜெர்மனி, பிரான்ஸ், கனடா ஆகிய நாடுகள் ஜி.8 அமைப் பில் அங்கம் வகிக்கின்றன ஆயினும் 'இரும்புத்திரை நாடு' என்று வர் ணிக்கப்பட்ட சோவியத் ஒன்றியத்தி னால் ஜி-8 அமைப்பில் உள்ள மேற் குலக நாடுகளுடன் ஒத்துப்போக முடியாதிருந்தது. சோவியத் ஒன்றி யத்தின் கம்யூனிஸ அரசால், மேற் குலக நாடுகளின் முதலாளித்துவ அரசுகளுடன் இணைந்து செயற்பட வும் முடியவில்லை.

சோவியத் ஒன்றியம் உடைந்த பின்னர் ரஷ்யா தனது இறுக்கமான கொள்கைகளை தளர்த்தி மேற் குலக நாடுகளுடன் இணைந்து செயற் படுவதில் அக்கறைகாட்டி வருகி றது. இந்த நடவடிக்கையை முன் னெடுப்பதில் ரஷ்ய அதிபர் விளாடி மிர்புடின் கூடிய கவனம் எடுத்து வந்தார்.

இந்த நிலையிலேயே ஜி-8 மா நாட்டை நடத்தும் பொறுப்பு ரஷ் யாவுக்குக் கிடைத்துள்ளது.

இதனை வரவேற்று ரஷ்யா விடுத்த அறிக்கையில், 'உலகம் மாறி வரு கிறது. உலகம் எதிர்கொள்ளும் பிரச் சினைகளைத் தீர்ப்பதில் ரஷ்யா தனது அர்த்தமுள்ள முழுப் பங்க ளிப்பை வழங்கும் ஆற்றலை விளக்க முன்வந்துள்ளது' என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

இதேசமயம், ரஷ்யாவில் சமீப ஆண்டுகளில், மேற்கொள்ளப்பட்டு வரும் பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் ஜனநாயகத்தை நோக்கிய அரசியல் மாற்றம் ஆகியவற்றுக்கு மேற்குலக நாடுகள் ரஷ்யாவுக்கு வழங்கிய பரிசே, ஜி-8 மாநாட்டை நடத்தும் பொறுப்பு என்று ஆய்வாளர் கள் கருதுகின்றனர். (ஒ-9)



ஜி-8 அமைப்பில் அங்கம் வகிக்கும் மேற்குலகத் தலைவர்கள் சிலருடன் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின்.

# திருமணவிழாவில் குண்டு வெடிப்பு; மணமகன் உட்பட 20பேர் பலி!

## பாகிஸ்தானில் சம்பவம்

இஸ்லாமாபாத்,ஜூன்28

பாகிஸ்தானில் திருமண வீடொன் றில் குண்டு வெடித்ததில் மணமகன் உட்பட 20பேர் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தானின் வடமேற்கு எல் லைப் புறத்திலுள்ள கனான் கார்சி கிராமத்தில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வடமேற்கு எல்லைப்புற மாகாண மக்கள் திருமணவிழாவின் போது பட்டாஸைமட்டுமன்றி நாட்டு வெடி குண்டுகளையும் வெடிக்க வைத்து மகிழ்வது வழக்கம். இத்தகைய கேளிக்கைக்காக திருமண வீடொன் றில் மணமகனின் நண்பர் ஒருவர் வெடிகுண்டு வெடிக்கவைக்க முயற் சித்தபோது கூட்டத்தினரிடையே அது வெடித்து விட்டது. இதில் மண மகன் உட்பட 20பேர் கொல்லப் பட்டார்கள். கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் வேடிக்கை பார்த் துக்கொண்டு நின்ற சிறுவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

# இந்தியப் பத்திரிகைத்துறையில் வெளிநாட்டு முதலீட்டுக்கு அனுமதி

## கடும் எதிர்ப்புக்கு மத்தியில்

புதுடில்லி,ஜூன்28

பத்திரிகைத்துறையில் வெளி நாட்டு நிறுவனங்கள் நேரடியாக 26 சதவீதம் முதலீடு செய்ய இந்திய அரசு அனுமதியளித்துள்ளது.

அன்றாடச் செய்திகள் மற்றும் தற்போதைய விவகாரங்களைப் பற்றி செய்தி வெளியிடாத பத்திரிகை களில் வெளிநாட்டு நிறுவனங்கள் 74 சதவீதம் முதலீடு செய்ய அனும திக்கலாம் என்றும் அரசு முடிவு செய்துள்ளது. தொழில்நுட்பம், மருத துவம் தொடர்பான செய்திகளை வெளியிடும் பத்திரிகைகள் இந்த பிரிவின் கீழ் இடம்பெறும்.

பிரதமர் வாஜ்பாய் தலைமை யில் நடந்த அமைச்சரவைக் கூட் டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்பட் டது. பத்திரிகைத் துறையில் வெளி நாட்டு நிறுவனங்கள் முதலீடு செயய அனுமதிக்கக்கூடாது என்று 1955ஆம் ஆண்டு அமைச்சரவைக் கூட்டத்தில் எடுத்த முடிவை, தேசிய ஜனநாய கக் கூட்டணி அமைச்சரவை மாற்றி யுள்ளது.

சர்ச்சைக்கிடமான இத்திட்டத்தை நாட்டிலுள்ள பெரிய பத்திரிகை நிறு வனங்கள் எதிர்த்து வருகின்றன. பல ஆண்டுகளாக இது பற்றி விவா திக்கப்பட்டு இப்போது இம்முடிவை மத்திய அரசு எடுத்துள்ளது.

ஆயினும் பத்திரிகைகளின் ஆசிரி யர் குழுவும், நிர்வாகமும் இந்தியர் களின் கட்டுப்பாட்டில் இருக்கும் வரை பாதுகாப்பு அளிக்கப்பட்டுள் ளது.

'பத்திரிகை நிறுவன நிர்வாகத தின் மீதான கட்டுப்பாடு வெளிநாட்டு நிறுவனங்களுக்குச் செல்லாத வகையில் முன்னெச் சரிக்கை நட வடிக்கைகளை எடுத்திருக்கிறோம். நிர்வாகக் குழு உறுப்பினர்களின் முக்கால் வாசிப்பேர் இந்தியர்களாக இருக்க வேண்டும். முதன்மை ஆசி ரியர் உட்பட ஆசிரியர் குழுவில் இடம்பெற்றிருப்போர் இந்தியாவில் வசிக்கும் இந்தியர்களாக இருக்க வேண்டும்' என்று மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்தார்.

பத்திரிகைத்துறை வெளிநாட்டு நிறுவனங்கள் நேரடியாக முதலீடு செய்வதை நாடாளுமன்ற நிலைக் குழு ஒட்டுமொத்தமாக நிராகரித் தது. தேசிய ஜனநாயக் கூட்டணியில் உள்ள சில கட்சிகள் உட்பட பல் வேறு அரசியல் கட்சிகளும் இத்திட் டத்தை எதிர்த்தன. இந்த எதிர்ப் புக்கிடையே இம்முடிவை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.

மத்திய அரசின் இந்த முடிவால் இந்தியப் பத்திரிகைத்துறை அந் நியரின் செல்வாக்குக்குட்பட்டு இந் தியாவுக்கு எதிரான - இந்தியாவின் இறைமையையே பாதிக்கக்கூடிய - கருத்துக்களை இந்தியாவில் பரப்ப அந்நிய சக்திகளுக்கு வாய்ப்பாக உள்ளதாகக் கூறப்படுவது குறிப் பிடத்தக்கது. (ஒ-9)

# சிட்னி விமான நிலையம் தனியாருக்கு விற்பனை

சிட்னி,ஜூன்28

பொதுச் சொத்துக்களை தனியா ருக்கு விற்றுவரும் ஆஸ்திரேலியா அரசின் திட்டத்திற்கு அமைவாக, சிட்னி நகரில் உள்ள 'கிங்ஸ்போர்டு ஸ்மித்' விமான நிலையம் சுமார் 28 ஆயிரம் கோடி ரூபாவுக்கு ஏலத் தில் விற்கப்பட்டுள்ளது.

இந்த விமான நிலையத்தை 'மெக்குவாரி' வங்கியை நடத்திவரும் 'சதேர்ண் கிராஸ் கொன் சோர்ட்டியம்' என்ற நிறுவனம் வாங்கியுள்ளது.

விமான நிலையத்தை வாங்குவ தற்காக இந்த நிறுவனத்துடன் 'சிட்னி கேட்லே கொன்சோர்ட்டியம்', 'ஏ.பி.என. ஆம்ரோ' வங்கியை நடத்தும் 'கனெக்ட் சின்டிகேட்' ஆகிய தனியார் நிறுவ னங்களும் போட்டியிட்டன.

இவ்வளவு அதிக விலைக்கு இதுவரை எந்த ஒன்றும் விற்கப் படா மையினால் இது ஓர் உலக சாதனை யாக கருதப்படுகிறது. (ஒ-9)

# மியான்மர் பெண்களுக்கு உரிமைகள் மறுப்பு

## ஆங்ஷாங் சூகி கவலை

பழங்கால வழக்கங்கள் காரண மாக மியான்மரில் பெண்களுக்கு உரி மைகள் மறுக்கப்படுகிறது என்று அந் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவி ஆங் ஷாங்சூகி தெரிவித்துள்ளார்.

தனது 57ஆவது பிறந்த நாள் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே ஆங்ஷாங் சூகி இக்கருத்தை முன் வைத்துள்ளார்.

மியான்மர் பெண்கள் பாரம்பரியங் களின் பெயரால் அவர்களது உரிமை கள் மறுக்கப்பட்டு அடக்கப்படுவதற்கு எதிராக போராடவேண்டியுள்ளது எனவும் -

சமூகத்தில் உள்ள அபிவிருத்தி வேலைகளைச் செய்வதில் பெண் கள் ஆர்வத்துடன் பங்குகொள்ள வேண்டும் எனவும் - அவர் கேட்டுக் கொண்டார். (ஒ-12)

# in memoriam

28.06.2002



**SWAMINATHAN BALACHANDRAN**

B.Sc.Dip. (Edu., Cey.)
Director, Undergraduate Department & Retd. Teacher,
Jaffna College, Vaddukoddai.

*What a Happy family we were together & there one fine day the light of the family was gone.*

*The tears in my eyes could wipe away, but the pain and ache in my heart will never fade away.*

32,Palam Road,
Kandermadam.
*28th June, 2002.* (5282)

*Loving wife,*
*Grace.B.*

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 03 - 06 - 1953 | 20 - 06 - 2000 |



**அமரர் கந்தையா கருணானந்தன் (ராசா)**

திதி:சங்கடஹர சதுர்த்தி

ஆலமரம் ஒன்று சரிந்ததையா
அதன் நிழலில் ஆறிய பறவையெல்லாம்
சிறகொடிந்தவை போல் திக்கெல்லாம்
தேடித் திரிகின்றனவே!
காலமெல்லாம் செல்வங்களுடன் வாழாமல்
என்னைக் கதியற்றவளாய்க் கண்ணீரில்
கலங்கவிட்டு காற்றோடு சென்றதேனோ?
நித்தமும் உமதுருவம் வந்து தாங்காது
நெஞ்சு தணல் போலக் கொதிக்குதப்பா!
ஆறாது எமது துயரம் என் அகத்திலே
அணையாத தீபமாய் உயிரோடு வாழுமப்பா!

*பிரிவால் துயருறும்:*
அன்பு மனைவி,
ஆருயிர்ச் செல்வங்கள்: சசிகரன், றஜீவ்கரன், தனுஷியா,

*'சிவபதி'*
*தாவடி வடக்கு,*
*கொக்குவில்*

(5263)

'விழுதுகள் நிலத்தைத் தொடும் வேளை
விழுந்து விட்டதே எங்கள் ஆலமரம்'

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 13 - 11 - 1959 | 09 - 07 - 2001 |



**திருமதி அமிர்தலிங்கம் இராசமலர்**

திதி: 28-06-2002

எங்கள் வானத்து விடிவிளக்கே!
என்றும் எங்களின் குலவிளக்கே!
சந்தனத்துக் குளிர்ச்சியும்
செந்தமிழின் எழுச்சியும்
தந்தெமக்கு நிமிர்ச்சி தந்த தமிழ்த் தாயே!
பசித்த வயிறு எதுவாயினும்
பார்த்திருக்காத பாரியே!
நெருப்பாற்றில் எமைத் தாங்கிப்
பயணித்த இலட்சிய ஓடமே!
எங்கள் வரலாற்றுப் பாலத்தைக்
கடந்து விட்ட கால நதியில்லையம்மா - நீங்கள்
என்றும் எங்கள் ஒவ்வொருவரது
ஆன்மாக்களின் அடி ஆழத்தில்
இரண்டறக் கலந்துவிட்ட - எங்கள்
இதயக் கோயிலின் தெய்வம் அம்மா நீங்கள்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கணவர்: க.அமிர்தலிங்கம்
பிள்ளைகள்: அ.யலோசனா, அ.யமுனா, அ.யசிதா, அ.ஜனராஜ்.

*இலந்தைக்காடு*
*சமரபாகு,*
*வல்வெட்டித்துறை.*

(5270)

## திருவடிநிலை மீனவரது வலைகள் சேதம்!

சங்கானை,ஜூன்28

இந்திய மீன்பிடிப் படகுகள் திருவடிநிலைக் கடல் பரப்பினுள் புகுந்து அப்பகுதி மீனவர்களினால் ஏற்கனவே கடலில் விரிக்கப்பட்ட வலைகளை சேதப்படுத்தியுள்ளன.

கெங்காதேவி கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் எஸ்.தெய்வேந்திரன் இது பற்றிக் கூறுகையில், மீன்பிடி தடைச் சட்டங்களினால் கஷ்டப்பட்ட மீனவர்கள் தற்போது இத்தடைகள் நீங்கி ஆழ்கடல் மீன்பிடியை ஆரம்பித்த வேளையில், இந்தியப் படகுகளின் வருகையால் தாம் மீன்பிடிக்க முடியாமல் சிரமப்படுவதோடு, பல லட்சம் பெறுமதியான மீன் வலைகளையும் இழக்க வேண்டியுள்ளதாகத் தெரிவித்தார். (ஒ-29)

## கிளிநொச்சி இளைஞர் யாழ்.ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்,ஜூன்28

கடும் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட நிலையில் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

பரவிப்பாஞ்சான் கிளிநொச்சியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை கிருசாந்தன்(வயது21) என்பவரே இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-12)

## 'மகளிரும் போரும்' என்ற பொருளில் கருத்தரங்கு

வலி.வடக்கு,ஜூன்28

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டக் கிளையினரால் "மகளிரும் போரும்" என்னும் தலைப்பில் ஒரு நாள் பயிற்சிக் கருத்தரங்கு இடம் பெறவுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையில் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு இக்கருத்தரங்கு இடம்பெற உள்ளது.

இப்பயிற்சிக் கருத்தரங்கில் கலந்துகொள்பவர்கள் எதிர்காலத்தில் கிராம மட்டங்களில் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுடன் இணைந்து கருத்தரங்குகளை நடத்தவுள்ளனர். (ஒ-86)

## கசிப்பு வழக்கில் 50 ஆயிரம் ரூபா அபராதம்!

வலி.வடக்கு,ஜூன்28

சட்டவிரோதமான கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டமை, விற்பனை செய்தமை, கசிப்பு காய்ச்சும் உபகரணங்களை வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுகளின் பேரில் கைதாகி ஆஜர்ப்படுத்தப்பட்ட ஒரு நபருக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தால் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பண்டத்தரிப்பு அம்மன் வீதியைச் சேர்ந்த மேற்படி நபர் இளவாலைப் பொலீஸாரால் ஆயிரத்து 875 லீற்றர் கோடா, 10 போத்தல் கசிப்பு ஆகியவற்றுடன் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார்.

இவரது மனைவியை ஏற்கெனவே கசிப்பு விற்பனையில் ஈடுபட்டதாகக் கூறி பொலீஸார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது கணவன் தன்னை கைவிட்டுவிட்டதாகக் கூறியிருந்தார். அதனையடுத்து நீதிமன்றம் உரியவரை அழைத்துக் குடும்பத்தை இணைத்து வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-86)

# துண்டி மயானத்தை பயன்படுத்த மக்களுக்கு படையினர் அனுமதி

கொழும்புத்துறை,ஜூன்28

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக பொதுப் பாவனைக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த கொழும்புத்துறை துண்டி இந்து பொது மயானம் நேற்றுமுதல் மக்கள் பாவனைக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை இந்துமன்றம் மற்றும் பொதுஅமைப்புக்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து பொதுமக்கள் துண்டி மயானத்தைப் பயன்படுத்த அப்பகுதிக்குப் பொறுப்பான படையினர் அனுமதி வழங்கினர்.

இம்மயானச் சூழல் பகுதிகளான கொழும்புத்துறை, ஈச்சமோட்டை, பாண்டியன்தாழ்வு, சுண்டுக்குளி போன்ற இடங்களில் உள்ளோர் இதுவரை காலமும் வில்லூன்றி, கோம்பையன்மணல் மயானங்களையே பயன்படுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 - 03 - 1944 | 28 - 06 - 1999 |



**செல்வி பரமேஸ்வரி செல்லத்துரை**

திதி: பூரணை 24.06.2002

அன்பின் திருவுருவாய் அணையா ஒளி விளக்காய்
விஞ்சும் பெருநிலவாய் வழிகாட்டிய - தெய்வமே!
ஆண்டுகள் பல சென்றாலும் ஆறாது எம் துயர்
நீண்டிடும் எம் வாழ்வில் நிறைவினைத் தந்திடும்.

*உங்கள் ஆத்மா சாந்திபெறத் தென்கோவை வீரபத்திரரைப் பிரார்த்திக்கின்றோம்.*

*"தாயகம்"*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

(5291)

உங்கள் நினைவுடன்
- குடும்பத்தினர்.

# இரண்டாம் ஆண்டு நினைவு தினம்

| இலங்கையில் மலர்வு | இந்தியாவில் உதிர்வு |
|---|---|
| 1980 ✦ 12 ✦ 05 | 2000 ✦ 06 ✦ 20 |



**செல்வன் பாலசுப்பிரமணியம் கோபிநாத்**

(விஞ்ஞானப் பிரிவு மாணவன் - யாழ்.இந்துக்கல்லூரி)
வேலணை - 4

*திதி:- சதுர்த்தி 2002.06.28*

உன் மார்பில் விழிமூடி ஏங்குகின்றோம்
தினமும் கனவில்
உன் ஆசை முகம் தேடி ஏங்குகின்றோம்
விடியும் பொழுது.

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

தகவல்:
Dr.ஐ.பாலசுப்பிரமணியம்
*நாவலர் வீதி, நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

- குடும்பத்தினர்.

(C/22720)

FREE

அனைத்து ப்ரஸியா
50g கிறீமுடன்,
ரூ. 20.00 பெறுமதியான
சினால் சோப் இலவசம்




சருமத்தை பொலிவாக்குவதுடன் மென்மையாகவும், அழகாகவும் செய்கிறது.
வெண்ணெய் - சருமத்தில் ஏற்படும் காயங்கள், வெடிப்புகள் என்பவற்றை குணமாக்குவதுடன், சருமத்தை மிருதுவாக்குகிறது.
குளிர்ச்சியாக்கி, சரும நோய்களிலிருந்தும் பாதுகாக்கிறது.

PHARMCO
MARKETING SERVICES (PVT) LTD.

Raj Advertising

# கசிப்பு விற்போருக்கு ஆதரவாக பொலீஸாரைத் தாக்கிய பொலீஸார்

## வென்னப்புவவில் சம்பவம்

கொழும்பு,ஜூன்28

கசிப்பு தயாரிப்போரை விடுதலை செய்யும்படி கோரி பொலீஸார் மீது பொலீஸாரே தாக்குதல் நடத்தினர். தாக்குதல் நடத்திய பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் ஒரு பொலீஸ்காரரும் கைதுசெய்யப்பட்டதோடு தற்காலிக வேலைநீக்கமும் செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் வென்னப்புவ பொலீஸ் நிலையத்தில் நடைபெற்றது. சிலாபம் குற்றத்தடுப்பு பொலீஸ் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின்பேரில் வென்னப்புவ பொலீஸ் பிரிவில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த ஏழு நபர்கள் கைது செய்யப்பட்டனர். கைதானோரை வென்னப்புவ பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கக் கூட்டிச்சென்றனர்.

அந்தவேளையில், வென்னப்புவ பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் ஒரு பொலீஸ்காரரும் கைது செய்யப்பட்டவர்களை விட்டுவிடும்படி வலியுறுத்தினர். சிலாபம் பொலீஸார் மறுக்கவே வென்னப்புவ பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் அவரது சகாவும் குற்றத்தடுப்புப் பிரிவினரைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

இவ்விடயம் வடமேல் மாகாண பிரதிப் பொலீஸ்மா அதிபர் ஆர்.எம். செனவிரத்னபண்டாவுக்கு அறிவிக்கப்பட்டது.

பிரதிப் பொலீஸ்மா அதிபரின் உத்தரவின் பேரில் சம்பந்தப்பட்ட பொலீஸார் இருவரும் கைதுசெய்யப்பட்டனர். (ஒ)

# குடாநாட்டுப் பாடசாலைகளை புனரமைப்பதற்கு நிதி உதவி

## உலக வங்கி வழங்கும்

யாழ்ப்பாணம்,ஜூன்28

அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட உலக வங்கி பிரதிநிதிகள், யாழ்ப்பாணத்தில் சேதமடைந்த பாடசாலைகளை மீளக்கட்டியெழுப்பவும், பாடசாலைகளுக்கு வேண்டிய உபகரணங்கள் வழங்கவும் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

குடாநாட்டில் பின்தங்கியிருக்கும் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக பாடசாலை அபிவிருத்தித் திட்டம் ஒன்றையும் விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளதாகக் கல்வி அமைச்சர் கூறியுள்ளார்.

யாழ்.குடாநாட்டிலுள்ள சில பாடசாலைகளில் அடிப்படை வசதிகள் இல்லாத குறைபாடுகள் மட்டுமன்றி, ஆசிரியர் பற்றாக்குறை, தளபாட வசதியின்மை, உபகரணங்கள் இல்லாமை போன்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்ய 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் 54 பாடசாலைகளில் நிலக் கண்ணிவெடிகள் அகற்றப்படவேண்டியிருப்பதாகவும் -

101 பாடசாலைகள் சேதமடைந்துள்ளதாகவும் - 64 பாடசாலைகள் யுத்தத்தினால் முற்றாக அழிக்கப்பட்ட நிலையில் உள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (ஒ)

# நோயாளர்கள் நேற்றுமுதல் தரைவழியாகக் கொழும்புக்கு

யாழ்ப்பாணம்,ஜூன்28

யாழ். ஆஸ்பத்திரியிலிருந்து மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படும் நோயாளர்கள் நேற்றுமுதல் தரைப்பாதை மூலம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு இதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

அம்புலன்ஸ் மற்றும் பஸ்களில் நோயாளர்கள், உதவியாளர்கள் என சுமார் 40பேர் நேற்று கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக யாழ். ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறு யாழ்ப்பாணத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட நோயாளர்கள் வவுனியாவில் தங்கவைக்கப்பட்டு இன்று கொழும்புக்குக் கொண்டு செல்லப்படுவர் -எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

கொழும்பில் மேலதிக சிகிச்சையைப்பெற்ற நோயாளர்களை அழைத்துக்கொண்டு ஒருதொகுதி வாகனங்கள் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் தரைவழியாக யாழ். ஆஸ்பத்திரியை வந்தடைந்தன.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு நடத்தும் நோயாளர் சேவை இதுவரைகாலமும் கப்பல்மூலம் கடல்வழியாக நடைபெற்றதும் -

கடந்த 20ஆம் திகதிமுதல் மேற்படி நோயாளர் கப்பல் சேவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதும் - தெரிந்தவையே. (எ-139)

### சாவகச்சேரி மகளிர் கல்லூரி பழைய மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,ஜூன்28

சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது. பழைய மாணவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார். (ஒ)

### விசாரணைகள் இன்று ஆரம்பம்

கொழும்பு,ஜூன்28

விடுதலைப் புலிகளின் தீவக அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன், உறுப்பினர் தயாளன் ஆகியோர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகப் படை அதிகாரிகள் - பொலீஸார் கொண்ட விசாரணைக்குழு இன்று விசாரணைகளை ஆரம்பிக்க விருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தக் குழுவின் தலைவராக றியர் அட்மிரல் எவ்.ஜி.தர்மபிரியவும் செயலாளராக லெப்.கொமாண்டர் எஸ்.ஆர்.எஸ்.ரத்நாயக்கவும் செயற்படுவர். சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் என்.ஜே.தேவாங்கனும் இக்குழுவில் இடம்பெற்றுள்ளார். (ஜ-3-4)

# பல்கலை. ஆணைக்குழுவுடன் தொடர்புகொள்ள அறிவுறுத்தல்

## 23 மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஜூன்28

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு 2002 - 2003 கல்வியாண்டில் கற்கை மேற்கொள்ளத் தெரிவுசெய்யப்பட்டுள்ளவர்களில் 23 மாணவர்களை பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவுடன் தொடர்புகொண்டு அவர்களது விண்ணப்பங்களில் கேட்கப்பட்ட விவரங்களைச் சமர்ப்பித்துத் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்.பல்கலைக்கழகப் பதிவாளர் கேட்டுள்ளார்.

அந்த மாணவர்களின் விவரம் வருமாறு:-

ஜி.கார்த்திக் (மருத்துவம்), ஜே. ஜெயராஜ் (மருத்துவம்), ரி.கலைமதி (விவசாயம்), எஸ்.சுதாநிதி (முகாமைத்துவம்), பி.றொசேலி (விவசாயம்), பி.சிவகௌரி (கலை), ஐ.உமா நந்தினி (கலை), ஜி.குமணன் (பௌதிக விஞ்.), எம்.ராமஜினி (மருத்துவம்), ஏ.பிரேமச்சந்திரன் (பௌதிக விஞ்.) எஸ்.தர்சனன் (மருத்துவம்), எம்.சுதன் (மருத்துவம்), வி.எஸ். குமார் (கலை), எஸ்.மீரா (கலை), ஆர்.எழில்வேந்தன் (பௌதிக விஞ்.), கே.இராசலிங்கம் (உயிரியல் விஞ்.), எஸ்.சிவசங்கர் (கலை), எஸ்.ஜெயானந்தன் (பௌதிக விஞ்.), எஸ். ராகுலன் (பௌதிக விஞ்.), எம்.தங்கராசா (உயிரியல் விஞ்.), பி.சௌதாமினி (பௌதிக விஞ்.) பி.நவரத்தினம் (பௌதிக விஞ்.), எஸ்.விஸ்வலிங்கம் (உயிரியல் விஞ்.).

இவர்களுக்கு மேற்படி விடயம் குறித்துக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக யாழ்.பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (ஒ-ரி)

# கழிவுநீர் தேங்குவதால் யாழ்நகரில் துர்நாற்றம்

யாழ்ப்பாணம்,ஜூன்28

யாழ்நகரப் பகுதியில் உள்ள கழிவுநீர் வாய்க்கால்களை குப்பை கூழங்கள் அடைத்துள்ளதால் கழிவு நீர் தேங்கி துர்நாற்றம் வீசுகிறது.

தற்போது தினசரி நகரப் பகுதியில் பெரும் தொகையான கழிவுப் பொருள்கள் குவிகின்றன. தென் பகுதியிலிருந்து குடாநாட்டுக்கு வரும நடைபாதை வியாபாரிகளும், பழக் கடை வியாபாரிகளும் கைவிடும் கழிவுகள் கழிவுநீர் வாய்க்கால்களுக்குள் விழுந்து நீரோட்டத்தைத் தடை செய்வதாலேயே துர்நாற்றம் வீசுகிறது.

நகரின் ஒரு சில பகுதிகளில் நீண்டநாள்களாக கழிவுநீர் வாய்க்கால்கள் துப்புரவு செய்யப்படாது இருப்பதாகவும் -

அதனால் நகரத்தில் நடமாடும் மக்கள் துர்நாற்றத்தால் அவதிப்படுவதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-6)

### கீரிமலையில் மலசலகூடம் கட்ட நிதி

வலி.வடக்கு,ஜூன்28

இந்துசமய கலாசார அமைச்சினால் வலி.வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட கீரிமலை தீர்த்தக் கேணிப் பகுதியில் மலசலகூடம் அமைப்பதற்கு 3 லட்சம் ரூபா நிதி வழங்கப்படவுள்ளது.

தற்போது கீரிமலைப் பகுதிக்கு சுற்றுலாப் பயணிகள் மற்றும் பிதிர்க் கடன் கழிக்கச் செல்பவர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-86)

# இருபது லட்சம் பேருக்கு 2 ஆண்டுகளில் வேலை

## அரசு நடவடிக்கை

கொழும்பு,ஜூன்28

இலங்கையில் தொழிலில்லாதவர்களின் எண்ணிக்கை சுமார் 22 லட்சம் என்று அரசு மதிப்பிட்டிருக்கின்றது. தேசிய தொழிற் கொள்கைத் திட்டமிடலுக்காக நடத்திய மதிப்பீட்டிலேயே இது தெரியவந்திருக்கிறது என்று அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

இதனால் எதிர்வரும் இரண்டு ஆண்டுகளில் 20லட்சம் பேருக்குத் தொழில் வழங்கும் திட்டமொன்றை அரசு நடைமுறைப்படுத்தவிருக்கிறது. தேசிய தொழிற்கொள்கை அடங்கிய திட்டமொன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜூலை ஆரம்பத்தில் அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசின் புதிய தொழிற்கொள்கைத் திட்டத்தின்கீழ் இளைஞர் சேனை ஒன்றை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கென நாடாளுமன்றத்தில் சட்டமூலம் ஒன்று சமர்ப்பிக்கப்படும். (ஒ)

# பனைமுதல் பரந்தன்வரை கள் விற்பனை அமோகம்

யாழ்ப்பாணம்,ஜூன்28

யாழ். - கண்டி வீதியில் பரந்தன் சந்திக்கும் - பளைக்கும் இடைப்பட்ட வெட்ட வெளிப்பிரதேசங்களில் காணப்படும் மரநிழல்களின்கீழ் கொட்டில்கள் போடப்பட்டு கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தென்பகுதியிலிருந்து வருபவர்கள் அங்கு இறங்கித் தாகம் தீர கள் அருந்துவதை அவதானிக்க முடிகிறது.

அதிக வெப்பம் நிலவும் இந்தப் பகுதியில் தாகம் தீரக் குடி தண்ணீரோ, குளிர்பானங்களோ கிடைப்பது அரிதாகவே உள்ளது.

கள்ளுக்கடைகளின் முகப்புப் பகுதியில் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் எழுதப்பட்ட பெயர்ப் பலகைகள் தொங்கவிடப்பட்டுள்ளன.

இந்தக் கடைகளுக்கு நீண்ட தூரங்களிலிருந்து சைக்கிள்களில் கள் கான்களில் எடுத்துவரப்பட்டு விற்பனை செய்யப்பட்டுவருகிறது. (ஒ-6)

# ஈழத்து இலக்கிய முயற்சிகள் கனதியும், தரமும் மிக்கவை

## மூத்த எழுத்தாளர் சு.வே.பெருமிதம்

யாழ்ப்பாணம்,ஜூன்28

ஈழத்து இலக்கிய முயற்சிகள் தமிழக இலக்கிய முயற்சிகளுக்கு எள்ளளவும் குறைந்தவை அல்ல என்று கூறினார் மூத்த எழுத்தாளர் சு.வேலுப்பிள்ளை.

'சிற்பி' சிவசரவணபவன் எழுதிய 'சத்தியதரிசனம்' சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டுவிழா அண்மையில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த விழாவில் கலந்துகொண்டு வெளியீட்டுரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

☆ முக்கிய இடங்கள் உண்டு. அவர் ஓர் ஈழத்துச் சிறுகதைப் படைப்பாளி. ஈழத்து நாவல் ஆசிரியர். ஈழத்து இதழியலுக்கு முக்கிய பங்களிப்புச் செய்தவர் - எனக் கூறினார்.

ஈழத்து இலக்கிய முயற்சிகள் தமிழக இலக்கிய முயற்சிகளுக்கு எள்ளளவும் குறைந்தனவல்ல. ஒப்பிட்டுப் பார்த்தால் எமது இலக்கிய முயற்சிகள் கனதியுள்ளவையாகவே இருக்கும். எமது ஆக்க இலக்கியங்கள் மிகச் சிறந்தவை. அவை இந்த மண்ணை களமாகக் கொண்டு, மக்களின் உணர்வுகளை - வாழ்வியல் நெறிகளை, பெரிதுபடுத்தி நிற்கின்றன. மக்களின் கீழ்த்தரமான உணர்ச்சிகளுக்கோ, ஆசைகளுககோ விருந்துவைப்பனவாக அமையவில்லை.

எமது இலக்கியப் படைப்புக்களில் கண்ணியம் உண்டு. வாழ்வியலை அடித்தளமாகக் கொண்ட நிலை உண்டு. கற்பனைக் கோலம் உண்டு. ஈழத்து இலக்கிய நோக்கு உண்டு.

ஈழத்து இலக்கியத் துறை ஆரோக்கியமான வளர்ச்சி கண்டு பரந்துள்ளது. அதன் வளரும் நிலைகளை வரலாற்று முறையில் ஆவணப்படுத்தும்போது சிறுகதைத் துறைக்கு களம் அமைத்து ஊக்குவிக்க பல ஊடகங்கள் முயன்றுள்ளன.

ஈழகேசரி சிறுகதைகள், மறுமலர்ச்சி சிறுகதைகள், சுதந்திரன் சிறுகதைகள் என்ற நிலைகளில் அக்காலச் சிறுகதைகள் ஆவணப்படுத்தப்படுகின்றன. சிறுகதை இலக்கியங்களை ஆவணப்படுத்துவதன் மூலம் இக்கால எழுத்தாளர்கள், வருங்கால எழுத்தாளர்கள் படிக்க - விமர்சிக்க - ஆய்வு செய்ய - வாய்ப்புக்கள் ஏற்படும்.

மனதில் ஓர் அசைவை, துடிப்பை உண்டாக்குபவையே சிறந்த இலக்கியங்கள். அவற்றை வெளிப்படுத்துவனவாக சிற்பியின் இலக்கியங்கள் உள்ளன.

தனி மனிதனின் இலக்கிய தாகத்தில் வடிகாலாக அமைந்துவிட்ட 'கலைச் செல்வி' மூலம் பல எழுத்தாளர்களை - ஓர் எழுத்தாளர் பரம்பரையை - உருவாக்கிய சிற்பி ஒரு சிறந்த கவிஞர். அவரின் கவிதைகளில் இலக்கியக் கோட்பாடு தலை தூக்கி நிற்கின்றது. இந்த இலக்கியக் கொள்கை உயிரோட்டமாய் - தொனிப்பொருளாய் - இருப்பதே சிற்பியின் வெற்றிக்குக் காரணம் - என்றார். (எ-152)

# தொலைக்கல்வி பரீட்சை சான்றிதழ் பெறாதோருக்கு

யாழ்ப்பாணம்,ஜூன்28

யாழ்.மாவட்டத்தில் இருந்து தொலைக்கல்விப் பயிற்சிநெறிப் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்தவர்களில் இதுவரையும் தமது சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் யாழ்.இந்துக் கல்லூரியில் இயங்கும் தொலைக்கல்வி நிலையத்தில் தமது சான்றிதழ்களை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைகளில் பெற்றுக் கொள்ளலாம் என்று சிரேஷ்ட போதனாசிரியர் அறிவித்துள்ளார்.

இதுவரை சான்றிதழ்களைப் பெறாதவர்களின் பெயர்கள் வருமாறு:-

சுப்பிரமணியம் மகாசாந்தி, நிர்மலகுமாரி சண்முகமூர்த்தி, செல்வரட்ணம் வளர்மதி, சின்னையா துரைராஜா, எலியன் சதாசிவம், இராசையா இராஜேஸ்வரி, சாந்தினி ஸ்ரீகாந்தன், கெங்கேஸ்வரி கலாவர்ணன், வேல்நாயகம் செல்வராணி, சின்னத்தம்பி தர்மரத்தினம் -

நாகமுத்து ரவிச்சந்திரன், புஸ்பராஜா ஸ்ரீகந்தராஜா, தேவமலர் அருளப்பு, பாலேஸ்வரி கிருஸ்ணபிள்ளை, கிறீஸ்துகமலா யோசவ், ஞானப்பிரகாசம் மேரிஜசிந்தா, மணிமாலா மாசிலாமணி, சிவனேஸ்வரி சுந்தரலிங்கம், ஆறுமுகம் சிவபாதம், நமசிவாயம் பிரமீளா -

உமாஜெயந்தி கணபதிப்பிள்ளை, இராசேஸ்வரி இராஜேந்திரம்பிள்ளை, குமாரவேலு திலகவதி, முத்துராசா சபீசா, குணராசா வாசுகி, கணபதிப்பிள்ளை கலாதேவி, இராசையா சியாமினி, தியாகராசா யோகேஸ்வரி, கொன்சப்ரா கமலேஸ் அன்ரனி மேரி, குமாரசாமி செல்வராணி -

மேரிவசந்தா அன்னராசசிங்கம், குமாரசாமி கேதீஸ்வரி, தில்லைநடராசா ஞானேஸ்வரன், தில்லையம்பலம் மகாலிங்கம், வல்லிபுரம் வள்ளியம்மை, அருளானந்தம் யோகேந்திரன், இந்திராதேவி இராஜரட்ணம், லோகேஸ்வரி ஸ்ரீரங்கநாதன், ஜோன்பிள்ளை நேரா, சிவஞானம் வாரித்தம்பி, பொன்னுசாமி இராஜேந்திரன். (ஒ-10)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### வகுப்புகள்

O/L 2002 பரீட்சை மாணவர்களுக்கான மாலை வகுப்புகள். ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், தமிழ், வர்த்தகம் சிறுதொகை மாணவர்களுடன், தனித்தனிக் கவனம், சித்தி பெறுவது உறுதி. 426 (302),காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (5235)

### வீடு விற்பனைக்கு

நல்லூர், செட்டித்தெரு ஒழுங்கை, 34/5ஆம் நம்பர் வீடு, 3 பரப்பில் உள்ள கல்வீடும் கிணறும் கட்டடங்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நா.தியாகராஜா, C/o. அ.சுந்தரராஜா, 11, 2ஆம் செப்பல் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு - 06. தொலைபேசி: 580005. (C/22674)

### விற்பனைக்கு

ஆபிரிக்க லவ்பேட்ஸ், ஜாவாப் பரட், விஞ்சேஸ் குருவிகள், பல இனங்களில் கலர் மீன்கள், மீன்தொட்டிகள், மோட்டர்கள், மீன்தொட்டிக்குரிய அழகுசாதனப் பொருள்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-40/17, சீனியர் லேன், யாழ்ப்பாணம். (5293)

தும்பு மிட்டாய் மெஷின் 7000/=, பேபி குளிர்சாதனப்பெட்டி, சிங்கர் குளிர்சாதனப்பெட்டி என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.றஞ்சித், 54, குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (5295)

திருநெல்வேலி சந்திக்கும் மருத்துவபீட வளாகத்திற்கும் சமீபமாக கோணாவளை ஒழுங்கையில் 5 ஆம நம்பர் வீடு, 3 பரப்பில் உள்ள கல் வீடும் கிணறும் வான்பயிர்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நா.தியாகராஜா, C/o அ.சுந்தரராஜா, 11 2ஆம் செப்பல் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு - 06. தொலைபேசி 580005. (C/22673)

### தவறிவிட்டது

'சசிபவனம்' சுதுமலைதெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை வசந்தி என்பவருடைய தே.அ.அ.(இல.626923992v), வி.அ.அ. (இல.0905012196) என்பன யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைக்கவும். (5299)

கொக்குவிலைச் சேர்ந்த கிறேசியன் என்பவரது கைச்செயின் (4பவுண்) 25.06.2002 அன்று கன்னாதிட்டிச் சந்திக்கும் கேணியடிச்சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் A.கிறேசியன், கொக்குவில் மேற்கு, கொக்குவில், கேணியடி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (5286)

191, பிரதான வீதி, திருகோணமலையைச் சேர்ந்த தெய்வேந்திரம் பிள்ளை மகேந்திரனின் தே.அ.அ. (இல.571291266V), வி.அ.அ என்பன வற்றுடன மணிப்பர்ஸ் கடந்த 20.06.2002 அன்று உடுவில் - மானிப்பாய் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வி.சதா சிவம், டச்சு வீதி, உடுவில் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (5306)

### உடன் தேவை

புதிதாக ஆரம்பித்துள்ள தையலகத்திற்கு வெட்ட/தைக்க அனுபவம் உடைய ஆண், பெண் ஆள்கள் தேவை. கிழமை நாள்களில் காலை 10 மணிக்கு நேரில் வரவும். பருத்தித்துறை வீதி, (மாநகரசபை முன்பாக), நல்லூர். (5119)

### இறைச்சிக் கோழி தேவை

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். தனபாலசிங்கம் 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (5303)

### வியாழமாற்றம்எப்படி?

30.06.2002 வியாழமாற்றம் 12 /= எங்கும் விற்பனையாகின்றது. (எல்லா ராசிப் பலன்களும்) "ஜீவன்பிரம்ம ஐக்கிய வேதாந்த ரகசியம்" ஆண்டுக்கத் தொடரும் அடங்கியது. நூலாசிரியர்:-"சத்யா"3ஆம் மைல், ஆனைக் கோட்டை. T.P.021 - 2753. (5300)

## பயணிகள் சிரமம்

யாழ்.-கண்டிவீதியில் எழுதுமட்டுவாழ் தொடக்கம் முகமாலை வரையிலான பகுதி சேதமடைந்த நிலையில் காணப்படுவதால் இவ் வீதியால் பயணஞ்செய்வோர் பல்வேறுபட்ட கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி வீதிப் பகுதியில் காணப்பட்ட பாரிய சேதங்கள் மற்றும் குழிகள் திருத்தப்பட்டுள்ளபோதிலும், ஷெல்கள் வீழ்ந்ததால் ஏற்பட்ட சிறு குழிகள் திருத்தப்படாமல் தொடர்ந்தும் காணப்படுவதால் வாகனங்களைச் செலுத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (எ-117)

## நினைவு மண்டபம் அமைப்பு

வலிகாமம் தெற்கு,ஜூன்28

மருதனார்மடம் கிறிஸ்தவ தேவாலய ஆச்சிரமத்தில் சேவகப் பணி புரிந்துவந்த சாம் அண்ணரின் நினைவாக மண்டபம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தென்னிந்தியத் திருச்சபை பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் அண்மையில் மேற்படி மண்டபத்தைத் திறந்து வைத்தார்.

மேற்படி ஆச்சிரமத்தில் இடம்பெற்ற பெந்தக்கோஸ்தே பெருவிழாவைத் தொடர்ந்து நடைபெற்ற திறப்பு விழாவில் அருட்திரு.ஈ.ஆர்.ஜெபநேசன், அருட்திரு.கருணசேகர, அருட்திரு.நேசகுமார் ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-152)

# இன்பகரமான வாழ்வுக்கு ஆன்மீகம் வழிகாட்டும்



இறைவன் படைத்த மனித வாழ்க்கைக்கு நல்ல நோக்கம் ஒன்று கட்டாயம் தேவை. நோக்கமில்லாத வாழ்வானது உண்மையில் அர்த்தமற்ற வாழ்வாகும். வாழ்வுக்கு அர்த்தம் ஊட்டி நிற்பது சமயநெறி தவறாத வாழ்வாகும். ஆன்மீக வாழ்வில் இந்த அரிய மானுடப்பிறவியைப் பயன்படுத்தி நன்மை பெற வேண்டும் என இந்துமதத் தத்துவங்கள் இயம்புகின்றன. பிறக்கும் போதே அழுதுகொண்டு பிறக்கும் மனிதன் அப்பிறவி முழுவதும் அழுது துன்புறாது மன நிம்மதியுடன் இருக்க ஆன்மீகம் வழிகாட்டுகிறது.

நாம் நல்ல வண்ணம் வாழ்வதற்கு ஞானக் குழந்தையாகிய திருஞானசம்பந்தர் நல்வழிகாட்டியுள்ளார். அவர் சீர்காழியில் உள்ள திருத்தோணிபுரத்துச் சிவனையும், சக்தியையும் கண்ணாரக்கண்டு பாடிய திருமுறையில்:

*மண்ணில் நல்ல வண்ணம்*
*வாழலாம் வைகலும்*
*எண்ணில் நல்ல கதிக்கு*
*யாதுமோர் குறைவிலை*
*கண்ணில் நல்ல ஃதுறும்*
*கழுமல வளநகர்ப்*
*பெண்ணி னல்லா ளொடும்*
*பெருந்தகை இருந்ததே!*

### ஞானக்கதிர்

- என்று வாழும் மனிதனுக்கு வாழ்வாங்கு வாழ்வியற் கருத்துக் கூறிப் பாடியுள்ளார்.

அற்புதமான கருத்தாழமுள்ள இப் பாடலின் பொருளை நாம் அனைவரும் உண்மையில் உணரவேண்டும். அதாவது, மண்ணில் வாழ்பவன் நல்ல வண்ணம் வாழ அவன் மனத்தில் எண்ணும் எண்ணங்கள் யாவும் நல்லனவாய் அமையவேண்டும். ஒரு மனிதனின் உள்ளத்தில் நல்ல எண்ணம், நல்லசிந்தனை, நல்ல நோக்கம், நல்ல தத்துவம், நல்ல செயற்பாடுகளுடன் நல்லவற்றைத் தினசரி எண்ணுபவனே நல்ல கதியை அடைவான் என்கிறார் திருஞானசம்பந்தர். 'எண்ணிய முடித்தல் வேண்டும் தெளிந்த நல்ல அறிவு வேண்டும்' என்கிறார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

மனிதன் தனது எண்ணங்களில் தினமும் அழுக்காறு, அவா, வெகுளி போன்ற அவலங்களை இருத்துவானாகில் துன்பகதியே அவன் வாழ்வாகி விடும். 'வாழ் வாழ வீடு' இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க' என்ற பரந்த மனிதாபிமான நோக்கமின்றி 'நான் வாழவேண்டும், எனது குடும்பம் வாழவேண்டும், எனக்கு எல்லாச் செல்வமும் வரவேண்டும், மற்றவன் எக்கேடு கெட்டாலும் அதைப் பற்றி எனக்கென்ன? மற்றவனை விட எனக்கே அந்தஸ்து வரவேண்டும்' இதுவே எம்மிற் பலரது இறை வழிபாட்டில் முக்கியமாக அமைந்துள்ளது. இதை எப்படிச் சமய வழிபாடு என்பது?

மாணிக்கவாசகர் திருவெம்பாவையில் முதல் ஆரம்ப வசனமாக 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி' என மிக அழகாகப்பாடியுள்ளார்.

இதன் பிரகாரம் எங்கள் சமய வாழ்வு சமய வாழ்வாக இருக்கின்றதா? என்பது உண்மையில் சிந்திக்க வேண்டியது. உண்பது, உடுப்பது, உறங்குவது, உல்லாசமாக வாழ்வது சமய வாழ்வா? ஆடையணிகலன்கள், ஆடம்பரங்கள் ஆண்டவன் விரும்புவது இல்லை.

அங்கொரு கண்ணும் இங்கொரு கண்ணும் ஆலய வழிபாடல்ல. தன்னல மறுப்புச் சமயத்தின் அடிப்படைக் கொள்கை, பொதுநலம் ஓம்புதல் சமயத்தின் உன்னதக் கொள்கை. இறை பக்தியுடையவன் இனியவற்றையே எதிர்பார்க்க வேண்டும். உண்மையில் நல்லதையே எதிர்பார்க்கும் மனிதன் தன் கண்ணுக்கு நல்ல காட்சியை ஏற்படுத்த வேண்டும். தினமும் ஆண்டவனின் அழகுப் பொலிவை ஆலயங்களுக்குச் சென்று காண்போமானால் மனம் இன்புறும்.

புன்னகையுடன் மலர் மாலைகள நிறைந்து அருள்பாலிக்கும் வண்ணம் இருக்கும் ஆண்டவனை அனுதினமும் சென்று ஆலயங்களில் வழி

**சி.சி.வரதராசா**

படவேண்டும். இதனைவிட்டு அகோரமான - அவலமான - காட்சிகளைப் பார்ப்போமானால் அகோரமான எண்ணங்களே எமக்குள் உருவாகும்.

திருஞானசம்பந்தர், சீகாழி இறைவன் சக்தியோடு இருந்து அருள் பாலிக்கும் தன்மையைப் 'பெண்ணினல்லாளொடும் பெருந்தகை இருந்ததே' என பாடலை நிறைவு செய்கிறார். இரக்கமுள்ள உலகத்திற்குத் தாயாக விளங்கித் தயவு, அன்பு, பாசம், நேசம், பரிவு காட்டுகின்ற பார் மகளோடு இறைவன் இருக்கின்ற காட்சி ஆனந்தமான தெய்வீகக் காட்சி.

எந்த நேரமும் ஒருவர் உள்ளத்தில் தெய்வீகமான நல்ல சிந்தனைகள் ஏற்பட வேண்டுமானால், நல்லதைப் பார்க்க வேண்டும். நல்லசூழல், நல்ல காட்சியைத்தேடி மனிதன் வாழ முயலவேண்டும். இறைவனுடைய ஆலயங்களில் என்றும் நாம் நல்லவற்றையே காணலாம். இறைவனது அருட்கோலத்தைக்கண்டு அகமகிழ்ந்து வாழலாம். இதனாலன்றோ, நமது மூதாட்டி ஔவைப்பிராட்டி 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' எனக் கூறியுள்ளார். ☆

நன்றி: ஞானச்சுடர்.

## எண்ணெய்க் காப்பு

*ஆலயம்:* ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலை ஞானவைரவர் ஆலயம்.
*நாள்:* நாளை (29.06.2002) சனிக்கிழமை.
*நேரம்:* காலை 8.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை.

அடியார்கள் எண்ணெய்க்காப்புச் சாத்த அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

- ஆலய பரிபாலன சபை.

(5288)

யாழ் நகர வாசிகளே!
இதோ இப்போது உங்கள் தேவையறிந்து உங்கள் கரங்களுக்கும்,
உயர்தரமான மெழுகு தடவப்பட்ட பாதுகாப்பான
ALADIN WAX MATCHES
அலடின் தீப்பெட்டி
ஏக விநியோகத்தர்:
ரூபா வெர்சடைல் டிரேடர்ஸ்
104ஏ, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம். (C/22682)

கொழும்பு செல்லும் பயணிகளுக்கு
ஒரு மாறுதலுக்காக எங்களிடம் தொடர்புகொள்ளுங்கள்
யாழ். - கொழும்பு சொகுசு பஸ் சேவை
உங்கள் ஆசனங்களைப் பதிவுசெய்ய:
ஸ்ரீ ராஜ் தொலைத் தொடர்பகம்
பிரதான வீதி, வட்டுக்கோட்டை.
T.P.No: 070- 212343
070- 212620
(வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகில்)
சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை.
T.P.No: 070 - 213224
S.R.தொலைத் தொடர்பகம்.
கொழும்பில்:
சப்கோ நிறுவனம்
No: 47, W.A. சில்வா மாவத்தை,
கொழும்பு - 06.
T.P.No: 559559, 555618, 554969.
(C/22722)

## மரண அறிவித்தல்

### இராசலிங்கம் மகேஸ்வரி(சின்னம்மா)

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், கரணவாய் தெற்கு, காவில் வயல், கரணவாயை வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் மகேஸ்வரி நேற்றுமுன்தினம்(26.06.2002) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரணவாய் தெற்கு, கரணவாய்.* (5292)

தகவல்: இ.தங்கராசா (மகன்)

## வடமராட்சிப் பிரதேசத்தில் மார்பு வலிக்குள்ளாவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

தென்மராட்சி,ஜூன்28

மார்பு வலியினால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை அண்மைக் காலமாக வடமராட்சியில் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மாதத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை 20இக்கும் மேற்பட்ட நோயாளர்கள் மார்பு வலியினால் பாதிக்கப்பட்டு மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் - வயது வேறுபாடின்றி இந்த நோயின் தாக்கத்திற்கு உள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும்-கூறப்பட்டது.

கடந்த மாதங்களில் மார்பு வலியினால் ஒன்று அல்லது இரண்டு நோயாளர்களே பீடிக்கப்பட்டு மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் - ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-117)

## வைத்திய அதிகாரி நியமனம்

தென்மராட்சி,ஜூன்28

மிருசுவில் ஆஸ்பத்திரிக்கு டாக்டர் ச.அம்பிகைபாலன் பொறுப்பதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து இதுவரைகாலமும மேற்படி ஆஸ்பத்திரியில் தற்காலிகமாகக் கடமையாற்றி வந்த டாக்டர் திருமதி இராஜேஸ்வரி சிவலிங்கம் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (எ-117)



எங்கள் சங்கரி ஆனந்தசங்கரி

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக பதவி உயர்வு பெற்று காரியாலயத்தை நோக்கி வந்துகொண்டு இருக்கும், தந்தை செல்வா வழி நடந்து, வீறு நடைபோடும் ஆனந்தசங்கரி அவர்களே உங்கள் வரவை மகிழ்ச்சியுடன் எதிர்நோக்கிக் கொண்டு இருக்கும் மக்களில் நானும் ஒருவன்

க.சுந்தரலிங்கம் (காரை மணிகண்டன்)

(5309)

# நிவாரணம், மீள்குடியமர்வு குறித்து யாழ்.அரச அதிபர் அறிவுறுத்தல்

## செயலகத்தில் நடந்த கலந்துரையாடலில்

கொக்குவில்,ஜுன்28

இலவச நிவாரணம் வழங்கல் மற்றும் மீள்குடியமர்வு தொடர்பாக யாழ்.மாவட்ட செயலகத்தில் உதவி அரசாங்க அதிபர்களுடன் யாழ். அரச அதிபர் நடத்திய கலந்துரையாடலில் மீளக் குடியமர்வோருக்கான இலசவ உலருணவு நிவாரணம் வழங்கல் மற்றும் உதவிகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின் முடிவில் பின்வரும் விடயங்களை நிவாரணம் வழங்கலில் கடைப்பிடிக்குமாறு அரச அதிபரினால் அறிவுறுத்தப்பட்டது.

வெளிமாவட்டங்களில் இருந்து மீளக்குடியமர்வோர் தற்காலிகமாகத் தங்கியிருந்த மாவட்டங்களில் இலவச உலருணவு நிவாரணம் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.

அவ்வாறு நிவாரணம் பெற்று வந்தவர்கள் சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்களிடமிருந்து அதற்கான உறுதிக்கடிதம் மற்றும் அப்பகுதியில் இருந்து பெயர் நீக்கம் செய்யப்பட்டுள்ளதற்கான அத்தாட்சி ஆகியவற்றைப் பெற்றுவரல் வேண்டும்.

இவ்வாறு பெற்று வந்தவர்களுக்கான இலவச உலருணவு நிவாரணக் கொடுப்பனவை யாழ். மாவட்டத்தில் உடன் வழங்குவதற்கு அவ்வப்பகுதி கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலர்களால் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று அரச அதிபர் அறிவுறுத்தினார்.

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்த மக்களில் கணிசமானவர்கள் தற்பொழுது மீளக்குடியேறி வருகின்றனர். அவர்களுக்கான இலவச உலருணவு நிவாரணம் வழங்கலில் பல தாமதங்கள் ஏற்படுவதாக பிரதேச செயலர்களினால் கலந்துரையாடலின் போது எடுத்துக் கூறப்பட்டது. இப்பிரச்சினையை எளிதாகத் தீர்க்கும் வகையில் அடுத்தமாதம்முதல் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து தற்காலிகமாக ஏனைய பிரதேசங்களில் வசிக்கும் மக்களுக்கான இலவச உலருணவு நிவாரணம் வழங்கல் தென்மராட்சிப் பிரதேச செயலரினால் மட்டும் மேற்கொள்ளப்படும் எனவும் -

இதற்கான ஒத்துழைப்பினை ஏனைய பிரதேச செயலர்கள் வழங்க வேண்டுமெனவும் -

அரச அதிபர் கேட்டுக்கொண்டார்.

மேலும் இவ்வாறான நிவாரணங்களை தற்போது மீளக் குடியமர விரும்பாத மக்களுக்கு அவ்வப் பிரதேசங்களிலேயே தென்மராட்சிப் பிரதேச ப.நோ.கூ.சங்கங்கள் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அரச அதிபர் தென்மராட்சி பிரதேச செயலரைக் கேட்டுள்ளார்.

கொழும்பில் நீண்டகாலம் தங்கியிருந்து தற்போது மீளக் குடியமர வருபவர்களுக்கான இலவச உலருணவு நிவாரண வழங்கலை மேற்கொள்ளும்போதும் மேற்கூறிய அறிவுறுத்தல்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனவும் அரச அதிபர் கேட்டுக்கொண்டார்.

இலவச உலருணவு நிவாரணம் பெறுவோரின் உள்ளக இடமாற்றங்கள் தொடர்பாக ஆராய்ந்தவிடத்து நிவாரண வழங்கலில் பாதிப்பு ஏற்படா வண்ணம் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் - இலவச நிவாரண ஒதுக்கீட்டில் பாதிப்பு ஏற்படாத முறையில் உள்ளூர் இடமாற்றங்கள் செயற்படுத்தப்படவேண்டுமெனவும் - கேடடுக்கொள்ளப்பட்டது. (ஒ-ரி)

# வேம்பிராய் மயானம் மீண்டும் மக்கள் பாவனையில்

தென்மராட்சி,ஜுன்28

மீசாலை வடக்கு வேம்பிராய் மயானம் இரண்டு வருடங்களின் பினனர் பொதுமக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

மீசாலை, புத்தூர்ச் சந்தியிலிருந்து கனகன்புளியடிச் சந்திவரை உள்ள வீதி கடந்த பல வருடங்களாகப் பொதுமக்களின் பாவனைக்குத் தடை செய்யப்பட்டிருந்தது.

மீசாலை வடக்கு, சரசாலைதெற்கு, வேம்பிராய், மந்துவில் போன்ற பகுதிகளிலிருந்து படையினர் வெளியேறியதைத் தொடர்ந்து மேற்படி பகுதிகளில் மீளக் குடியமர்ந்து மக்கள் வேம்பிராய் மயானத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# தொலைபேசி கட்டணத்தை செலுத்த புதிய நடைமுறை

கொழும்பு,ஜுன்28

தொலைபேசிப் பாவனையாளர்கள் தமது தொலைபேசிக் கட்டணங்களை இலகுவாக செலுத்தக்கூடிய வகையில் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனம் புதிய திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

இலங்கை வங்கியும் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனமும் இணைநது இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்தவுள்ளன.

இலங்கை வங்கிக் கிளை ஒன்றில் நடைமுறைக் கணக்கை வைத்திருக்கும் ஒருவர் தமது தொலைபேசிக் கட்டணத்தை அந்த நடைமுறைக் கணக்கினூடாகவே செலுத்த முடியும்.

இந்த நடைமுறையைப் பின்பற்றுவதன் மூலம் தொலைபேசிக் கட்டணத்தை செலுத்துவதற்கு ரெலிகொம் நிறுவனத்துக்குச் செல்வதை தவிர்க்கமுடியும்.

குறித்த நபரின் பெயரில் நடைமுறைக் கணக்கில் உள்ள தொகை முடிவடையும்வரை அவரது தொலைபேசிக் கட்டணங்களை வங்கி மாதாந்தம் ரெலிக்கொம் நிறுவனத்துக்கு அனுப்பிவைக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

# காங்கேசன் சாரணர் சங்க வருடாந்த பாசறை விழா

யாழ்ப்பாணம்,ஜுன்28

காங்கேசன்துறை சாரணர் கிளைச சங்கத்தின் 22 ஆவது வருடாந்த சாரணர் பாசறை விழாவும், குருளைச் சாரணர் வெளிக்கள நாளும் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ளன.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி வளாகத்தில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு சாரணர் பாசறை விழா ஆரம்பமாகி இரவு 11 மணிவரை நடைபெறும்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி இரவு 11 மணிவரை நடைபெறும். இந்த நிகழ்வுகளைப் பொதுமக்கள் பார்வையிட பிற்பகல் 2 மணி தொடக்கம் 6 மணி வரை அனுமதிக்கப்படுவர்.

இறுதிநாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5 மணிவரை நடைபெறும். பொது மக்கள் காலை 10.00 மணிமுதல் 12 மணிவரை நிகழ்வுகளைப் பார்வையிட அனுமதிக்கப்படுவர்.

இந்தப் பாசறை நிகழ்வுகளில் சாரணிய உறுப்பினர்களுக்கு இடையேயான போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ஒ-6)

# ஊடகவியலாளர் மீது தாக்குதல்; பத்திரிகையாளர் சங்கம் கண்டனம்!

யாழ்ப்பாணம்,ஜுன்28

மூதூரில் இடம்பெற்ற வன்முறைச சம்பவங்களின்போது ஊடகவியலாளர் சற்சிவானந்தம் தாக்கப்பட்டு, அவரது இல்லம் சேதமாக்கப்பட்டமைக்கு வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் வெளியிட்ட கண்டன அறிக்கையில் -

மூதூரில் இடம்பெற்ற வன்முறைச சம்பவங்களின்போது சுதந்திர ஊடகவியலாளரான சற்சிவானந்தன் தாக்கப்பட்டதையும் அவரது இல்லம் சேதமாக்கப்பட்டதையும் வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் கடுமையாகக் கண்டிக்கிறது.

இச்சம்பவம் தொடர்பாக அரசு நீதியான விசாரணை ஒன்றுக்கு உத்தரவிட வேண்டும் அத்துடன் தாககுதலில் சேதமடைந்த அவரது இல்லத்துக்கு நஷ்டஈட்டினையும் வழங்க வேண்டும் என்றுள்ளது. (ஒ)

# 'இசற்' முறைக்கு எதிரான மனு தள்ளுபடி

கொழும்பு,ஜுன்28

பல்கலைக்கழகங்களுக்குப் புதிய மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கு, பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் தற்போது அறிமுகப் படுத்தப்பட்டுள்ள 'இசற்' புள்ளி முறையினை தடைசெய்யக்கோரி மாணவர் குழுவொன்றினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மனுவை அந்த நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளதாகத் தெரிய வருகிறது.

2001ஆம் ஆண்டு ஜீ.சி.ஈ.உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பத் திகதி முடிவின் பின்னரே இந்த 'இசற்' புள்ளிமுறை அறிமுகப்படுத்தப்பட்டதால் தாங்கள் ஏமாற்றமடைந்துள்ளதாகவும் -

விண்ணப்பத் திகதிக்கு முன்னர் இதனை அறிமுகப்படுத்தாததனால் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு தனது கடமையிலிருந்து தவறிவிட்டதாகவும் -

மாணவர் குழு தமது மேன்முறையீட்டில் கொழும்புப் பத்திரிகை ஒன்றிற்குத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

### வீதிக் கண்காணிப்பில் சுன்னாகம் பொலீஸார்

சுன்னாகம்,ஜுன்28

சுன்னாகம் பொலீஸார் கடந்த சில தினங்களாக போக்குவரத்துக் கண்காணிப்பில் ஈடுபட்டுவருகின்றனர்.

வீதியில் செல்லும் வாகனங்களின் வேகத்தைக் கண்காணிப்பதுடன், சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வரி அனுமதிப்பத்திரம் என்பவற்றையும் சோதனையிட்டு வருகின்றனர். (எ-27)

### யாழ்.ஆஸ்பத்திரிக்கு புதிய பணிப்பாளர்

யாழ்ப்பாணம்,ஜுன்28

யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளராக வைத்திய கலாநிதி எஸ்.சதுர்முகன் நேற்றுமுன்தினம் பதவிப்பொறுப்பேற்றுக்கொண்டார்.


இவர் மட்டக்களப்பு சுகாதார சேவைகள் பணிப்பாளராகக் கடமையாற்றியவராவார்.

இதேசமயம், கடந்த 12 வருடங்களாக யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளராக பணியாற்றிய டாக்டர் செல்வி நவமலர் கனகரட்ணம் எதிர்வரும் முதலாம் திகதி முதல் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியாகப் பதவிப்பொறுப்பேற்கவுள்ளார். (ஒ 15-139-ரி)



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையினரால் புதிதாக அமைக்கப்பட்ட அன்னதான மண்டபம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

வேலணை பிரதேச செயலர் செ.இரத்தினம் நாடாவை வெட்டி மண்டபத்தைத் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ ஜம்புகேஸ்வர மகேஸ்வர சிவாச்சாரியார், அன்னதான சபைத் தலைவர் த.சச்சிதானந்தன் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். (எ)



கல்வியங்காடு பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிக்கான பரிசளிப்புவிழா அண்மையில் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி போட்டியில் சித்திபெற்ற மாணவர் ஒருவருக்கு முன்னாள் மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் சைவப் புலவர் எ.அனுஷாந்தன் மற்றும் ஆலய நிர்வாக உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். (எ)

## அதிபர், ஆசிரியர் சிரமங்கள் குறித்து

# இலங்கை ஆசிரியர் சங்கம் அமைச்சர்களுக்கு மகஜர்

## ஒரு லட்சம் கையெழுத்துக்களுடன்

வலிகாமம் தெற்கு,ஜுன்28

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் ஆகியோர் தொழில் ரீதியாக எதிர் கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக கல்வி அமைச்சருக்கும் மாகாணக் கல்வி அமைச்சருக்கும் மகஜர் ஒன்றை இலங்கை ஆசிரியர் சங்கம் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒரு லட்சம் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் கையொப்பங்களுடன் இந்த மகஜர் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கம் ஏற்கனவே கையெழுத்து சேகரிப்பை ஆரம்பித்துள்ளது. யாழ்.மாவட்ட ஆசிரிய சங்கமும் தற்போது கையெழுத்துக்களை சேகரிக்க ஆரம்பித்துள்ளது.

சங்கத்தின் பிரதிநிதிகள் மூலம் பாடசாலைகளுக்கு கையெழுத்துப் படிவங்கள் அனுப்பப்பட்டு கையொப்பங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

அமைச்சர்களிடம் சமர்ப்பிக்கப்பட உள்ள கோரிக்கைகளில் சில வருமாறு:-

ஆசிரிய சேவையில் பதவி உயர்வுகளை வழங்குவதில் உள்ள தடைகள் நீக்கப்படவேண்டும்.

இடர்காலக் கொடுப்பனவு 12 மாதங்களுக்கான சம்பளத் தொகையாக அதிகரிக்கப்படவேண்டும்.

திஸ்ஸ தேவேந்திரா சம்பள ஆணைக்குழுவின் சம்பள அதிகரிப்பு சிபாரிசின் அடிப்படையிலான அதிசிரேஷ்ட வகுப்பு இலங்கை ஆசிரியர் சேவைக்கும் உருவாக்கப்பட வேண்டும்.

கஷ்டபிரதேச ஆசிரியர்களுக்கு ஆயிரம் ரூபாவும், அதிகஷ்ட பிரதேச ஆசிரியர்களுக்கு ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்படுவதோடு கஷ்ட பிரதேச சேவைக் காலம் 3 ஆண்டுகளாக மட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

அதிபர், ஆசிரியர்களுக்கு 1995 முதல் வழங்கப்பட வேண்டிய சம்பள நிலுவைப் பணம் வழங்கப்பட வேண்டும். (ஒ-152)

## 15 வருடங்களின் பின்னர்

# மாகாணமட்டப் போட்டிகள் யாழ்.நகரில் அடுத்த மாதம்

யாழ்ப்பாணம்,ஜுன்28

கடந்த 15 வருடங்களின் பின்னர் யாழ்.மாவட்டத்தில் வடக்கு - கிழக்கு மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ளன.

இந்த விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு 8 மாவட்டங்களைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் யாழ்ப்பாணத்திற்கு அணி திரள உள்ளனர்.

அடுத்த மாதம் 6ஆம், 7ஆம் திகதிகளில் உதைபந்தாட்டம் மற்றும் கூடைப்பந்தாட்ட போட்டிகளே இங்கு நடைபெறவுள்ளன. இந்தப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள வீரர், வீராங்கனைகள் 5ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

உதைபந்தாட்டப் போட்டிகள் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கிலும் கூடைப்பந்தாட்டப் போட்டிகள் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலிலும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-6)

# விளையாட்டு நிகழ்வுகள்

சுன்னாகம்,ஜூன்28

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வன்மைப்போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் க.சிவாஜி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், ஸ்கந்தா பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளை உபதலைவர் ஏ.எதிர்வீரசிங்கம் முதன்மை விருந்தினராகவும், உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன் சிறப்பு விருந்தினராகவும், உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.பாலசிங்கம் துறைசார் விருந்தினராகவும் கலந்துகொள்வர். (எ-27)

✪ ✪ ✪

யாழ்ப்பாணம்,ஜூன்28

இலங்கை வங்கி மற்றும் வர்த்தக வங்கியின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தினரால் நடத்தப்பட்டுவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30மணிக்கு, கோண்டாவில் மறுமலர்ச்சிக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள இரண்டாம் சுற்றுப் போட்டியில் கொக்குவில் வராகி வி. கழகமும், அரியாலை காந்தி வி. கழகமும் பங்குபற்றுகின்றன. (ஒ-ரி-86)

✪ ✪ ✪

யாழ்ப்பாணம்,ஜூன்28

யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையில் இடம்பெற்றுவரும் 19வயதுப் பிரிவினர்க்கிடையேயான கிறிக்கெற் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

இன்று வெள்ளிக்கிழமை சென். பற்றிக்ஸ் கல்லூரி எதிர் சென். ஜோன்ஸ் கல்லூரி (சென். பற்றிக்ஸ் மைதானம்) (ஒ-ரி-86)

✪ ✪ ✪

யாழ்ப்பாணம்,ஜூன்28

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கம் வடமராட்சிக்குட்பட்ட கழகங்களுக்கிடையில் நடத்திவரும் 'ரொப் ரென்' உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை கொற்றாவத்தை ரேஞ்சர்ஸ் வி.கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

பிற்பகல் 4மணி - வல்வை ஆதி சக்தி வி.கழகம் எதிர் பருத்தித்துறை ஐக்கிய வி.கழகம்.

பிற்பகல் 5 மணி - அல்வாய் நண்பர்கள் வி.கழகம் எதிர் அல்வாய் மனோகரா வி.கழகம். (ரி)

✪ ✪ ✪

யாழ்ப்பாணம்,ஜூன்28

வலிகாமம் உதைபந்தாட்டச் சங்கம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் அராலி அண்ணா வி.கழகமும், சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் வி. கழகமும் பங்குபற்றுகின்றன. (ஒ-ரி-86)

✪ ✪ ✪

யாழ்ப்பாணம்,ஜூன்28

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி கலாசார விளையாட்டு அமைச்சினால் பாடசாலைகளுக்கிடையில் நடத்தும் மாகாண மட்டப் போட்டிகளில் கலந்துகொள்வதற்காக யாழ். மாவட்ட மாணவர்கள் குழு நேற்று திருமலை சென்றது.

திருமலைக்குச் சென்ற பாடசாலை அணிகளின் விவரம் வருமாறு:-

**வலைப்பந்தாட்டம்**

15வயதுப் பிரிவு - பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி.

17வயதுப் பிரிவு - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

19வயதுப் பிரிவு - தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

**உதைபந்தாட்டம்**

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி. (ஒ-ரி-86)

✪ ✪ ✪

யாழ்ப்பாணம்,ஜூன்28

வல்வெட்டித்துறை விநாயகர் வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டியும், விளையாட்டு மைதானத் திறப்பு விழாவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மாஞ்சோலை மைதானத்தில் நடைபெறவுள்ளன. (ஒ-9)

✪ ✪ ✪

யாழ்ப்பாணம்,ஜூன்28

யாழ். மத்திய கல்லூரியின் உள்ளரங்க விளையாட்டு கழகம் நடத்தும் மேசைப்பந்தாட்டப் பயிற்சி முகாம் நாளையும், நாளைமறு தினமும் நடைபெறவுள்ளது.

யாழ். மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவற்றின் தரம் 6 மாணவர்கள் இந்த முகாமில் பங்கேற் பர். (ஒ)

# புலிகளின் அரசியல் பணிமனை இன்று காரைதீவில் இயங்கும்

தமிழீழ விடுதலைப் புலிகளின் காரைதீவு அரசியல் பணிமனையில் இன்றுமுதல் பொதுமக்களின் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காரைதீவு அலுவலகத்தில் 5 உறுப்பினர்கள் முறைப்பாடுகளினை ஏற்றுக்கொள்ள பொறுப்பாக இருப்பார்கள். அவர்களின் விவரம் வருமாறு:-

காரைதீவு பொறுப்பாளர் என்.தங்கவேல், உறுப்பினர்களான யோகநமபி, வி.ஜெயகோபன், க.உதயன், சிவராசா. அலுவலக தொலைபேசி இல. 067-20136 ஆகும். அம்பாறை மாவட்டத்தில் இது 4ஆவது அரசியல் பணிமனையாகும்.


**வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய**

**வைரவர் சாந்தி விஞ்ஞாபனம்**

**இன்று (28.06.2002) வெள்ளி நண்பகல் அன்னதானமும் மாலை வைரவப் பெருமானுக்கு விஷேச அபிஷேகம் நடைபெற்று வீதி உலாவரும் நிகழ்வைத் தொடர்ந்து விஷேச நிகழ்ச்சிகளாக**

- ★ நல்லூர் உதயகுமாருடன் இணைந்து பிரபல நாதஸ்வர, தவில் வித்துவான்கள் வழங்கும் நாதஸ்வர இசை.
- ★ செல்வன் வசந்தனின் புல்லாங்குழல் இசை.
- ★ ராகம்ஸ் இசைக்குழுவினர் வழங்கும். "இதய ராகம்"

ஒளி: மனோலைட், ஒலி: கண்ணா சவுண்ட்ஸ், மினி சவுண்ட்ஸ்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(5322) தொண்டர்கள் (உபயகாரர்)



**சர்வதேச இந்துமத குருமார் ஒன்றிய குருகுலம்**

**(சமஸ்கிருத கல்விப் பயிற்சி கலாசாலை)**

*ஆரம்ப நாள்:* 29.06.2002 சனிக்கிழமை
*நேரம்* : பிற்பகல் 2.30மணி
*இடம்* : கதிரைமலை சிவன் தேவஸ்தான மண்டபம், சுன்னாகம்.
*ஆசிரியர்கள்:* திரு.பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா B.A.
திரு.பிரம்மஸ்ரீ கி.பங்குசசர்மா

விண்ணப்பித்தவர்கள் தங்கள் பெற்றோர்களுடன் சமுகந்தரவும்.

*மு.கு.:* அமைப்பின் நிர்வாகசபை உறுப்பினர்களும் நிகழ்வில் தவறாது சமுகம் தரவும்.

கா.சந்திரசேகரசர்மா
பொதுச்செயலாளர்.

(5317)



**நீர்வேலி மேற்கு**
**மாலை வைரவர் தேவஸ்தானம்**
**வருடாந்த பொங்கல் விழா**

இன்று வெள்ளிக்கிழமை இரவு 7.00 மணியளவில் ஆரம்பமாகி நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு முடிவடையும் என்பதை வைரவ அடியார்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இப்பொங்கல் விழாவில் அனைத்து அடியார்களும் கலந்துகொண்டு எம் பெருமானின் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும்வண்ணம் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

(5321) - பரிபாலன சபை.


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூன்28

நவாலி புனித பேதுருவானவர் ஆலய வருடாந்தத் திருவிழா தற்பொழுது நடைபெற்றுவருகின்றது. இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் இடம்பெறும். நாளை சனிக்கிழமை காலை 7மணிக்கு திருநாள் திருப்பலி, திருச்சொரூபப்பவனி, சொரூப ஆசீர் என்பனவற்றுடன் விழா நிறைவுபெறும்.

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்28

கச்சாய் புனித இராயப்பர் ஆலய வருடாந்த நவநாள் திருவிழா கடந்த 20ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 6மணிக்கு நற்கருணை வழிபாடுகள் நடைபெறும் என்றும், நாளை சனிக்கிழமை காலை 7மணிக்கு திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு தொடர்ந்து புனிதரின் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும் என்றும் ஆலய பங்குத்தந்தை அருட்திரு. அருள்நேசன் அடிகளார் தெரிவித்தார். (ஒ-6)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்28

ஆனைக்கோட்டை உயரப்புலம் புனித அடைக்கல மாதா பங்கைச் சேர்ந்த திருஇருதயநாதர் பக்திச்சபையின் தமது 10ஆவது ஆண்டு நிறைவு விழாவை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சிறப்பாகக் கொண்டாடவுள்ளனர். அன்று காலை புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் திருப்பலியும் திருஇருதயநாதரின் திருச்சொரூபப்பவனியும் சொரூப ஆசீரும் இடம்பெறும்.


**SPOKEN ENGLISH WITH GRAMMAR**
*LECTURES BY:-*
**MR. M.A.HARI**

✪ புதிய பிரிவு ஆரம்பம் ✪
ஞாயிறு (30.06.2002) மாலை 3மணி
SUNDAY / SATURDAY } 3.00p.m. - 4.00p.m.
(5323)

நாவலர் கல்வி நிலையம்,
ஆனைப்பந்தியடி, யாழ்ப்பாணம்.


# தமிழ்க் கல்வி வளர்ச்சியில் அமைச்சு கவலையீனம்

## மகாசிவம் குற்றச்சாட்டு

நாட்டின் தமிழ்மொழிக்கல்வி வளர்ச்சியில் கல்வி அமைச்சு உரிய கவனம் செலுத்துவதில்லையென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் த.மகாசிவம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் பிரதமரின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனிடம் முறையிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கல்வி அமைச்சில் இதுவரை காலமும் இருந்துவந்த தமிழ்மொழிப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் பதவி மற்றும் தமிழ்ப் பணிப்பாளர் பதவி உட்பட பல முக்கியமான பதவிகள் முற்றிலுமாகக் கைவிடப்பட்டதாகவும் - தேசிய கல்வி நிறுவகத்தில் தமிழ்மொழிமூல கல்விக்கென ஒரு அதிகாரி கூட நியமிக்கப்படவில்லை எனவும் - மகாசிவம் பிரதமரின் செயலாளரிடம் சுட்டிக்காட்டியுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-4)

### பலாலி கலாசாலை மாணவருக்கு!

பலாலி ஆசிரியர் கலாசாலை மாணவர்களில் தற்போது கற்பித்தல் பயிற்சியில் ஈடுபட்டுள்ள ஆசிரிய மாணவர்கள் மற்றும் கலாசாலை விரிவுரையாளர்கள் அனைவரையும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கலாசாலைக்குச் சமுகமளிக்குமாறு கலாசாலை அதிபர் கேட்டுள்ளார்.(ஒ-6)

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் சாமிநாதன்

*(கட்டட ஒப்பந்தகாரர்)*

கோட்டைக்காடு மல்லாகத்தை வசிப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் சாமிநாதன் அவர்கள் நேற்று (27.06.2002) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - நாகாத்தை தம்பதியினரின் அன்பு மகனும், பரஞ்சோதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற முத்துகிருஸ்ணர், இராசு (கட்டட ஒப்பந்தகாரர்), நல்லபிள்ளை, பறுவதம், பரஞ்சோதி, காலஞ்சென்ற திரவியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரிமளம், பொன்னையா மற்றும் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன், வேலுப்பிள்ளை, பாக்கியம் ஆகியோரின் மைத்துனரும், கலைமணி, சத்தியசோதி, அருள்சோதி, ஜெகசோதி, இன்பசோதி, கலைச்சோதி, பத்மசோதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரதி, இரத்தினசபாபதி, லோகராஜன் (இ.மி.ச.), வசீகரன் (சீ.கூ.தா.), நிர்மலா, சுரேஸ் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2002) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் மல்லாகம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*மல்லாகம்.* (5318) **மக்கள், மருமக்கள்.**

## திருமதி அப்பாபிள்ளை பராசக்தி

அத்தியடி கல்வளவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், கொண்ட திருமதி அப்பாபிள்ளை பராசக்தி அவர்கள் நேற்று (27.06.2002) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம்அப்பாபிள்ளை (**Clifford Pier Master Singapore**)யின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தங்கவேல் - மாணிக்கத்தின் மகளும், கணேஸ்வரி, காலஞ்சென்ற கௌரிதேவி மற்றும் சிவகுமார் (வேலைப்பகுதி - மாநகரசபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற முத்துவேலுப்பிள்ளை மற்றும் சுவாமிநாதன் புரமேஸ்வரி, சோமசுந்தரம், காலஞ்சென்ற இராசலட்சுமி மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜயராம், கஜராம், பிரதீப் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(28.06.2002) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வில்லூன்றி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*12/4, அத்தியடி புதுவீதி,*
*யாழ்ப்பாணம்.* (5315) அ.சிவகுமார் (மகன்)

## சுவாம்பிள்ளை சூசைப்பிள்ளை

*(பேரன்ர சின்னத்தம்பி)*

இளவாலையைப் பிறப்பிடமாகக்கொண்ட சுவாம்பிள்ளை சூசைப்பிள்ளை 25.06.2002 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற எலிசபேத்துவின் அன்புக் கணவரும் சுவாம்பிள்ளை (கனடா), மரியநாயகம் (துரை - ஜேர்மனி), ரோகினி, டெய்சி, அன்ரன் (இத்தாலி), பிரான்சிஸ் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பபி (கனடா), றீற்றா (ஜேர்மனி), நேசரட்ணம், ஜெயராசா, செந்தில்மதி (ஹொலண்ட்), பிறேமா (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், மேரிசிசிலா, காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை, றோசம்மா, திரேசம்மா, காலஞ்சென்ற அருளானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (29.06.2002) சனிக்கிழமை காலை 9 மணிக்கு பெரியவிளான் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித அன்னாள் ஆலயத்தில் நல்லடக்க ஆராதனை இடம்பெற்று புனித அன்னம்மாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*பெரியவிளான்,*  மரியநாயகம் *(மகன்),*
*இளவாலை.* (5325) நேசரட்ணம் *(மருமகன்).*

## திருமதி வள்ளியம்மை ஆறுமுகம்

கைதடி நாவற்குழியை வசிப்பிடமாகவும், தற்போது திருநெல்வேலியில் வசித்தவருமான திருமதி வள்ளியம்மை ஆறுமுகம் அவர்கள் நேற்று (27.06.2002) வியாழன் காலை 10.00 மணியளவில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற S.K.ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
*528, பலாலி வீதி,*
*திருநெல்வேலி தெற்கு,*
*யாழ்ப்பாணம்.* (5324)

தகவல்:
ச.தணிகாசலம் *(J.P.),*
ந.திருநீலகண்டன் *(C.T.B.).*

# தீவகம் நோக்கிய எழுச்சிப் பயணத்தில்...

















சமாதானத்துக்கு எதிரான சக்திகளின் நடவடிக்கைகளை கண்டித்து நேற்று யாழ்.நகரிலிருந்து ஊர்காவற்றுறைக்கு நடத்தப்பட்ட பேரணி மற்றும் பொதுக் கூட்டம் ஆகியவற்றில் இடம்பெற்ற காட்சிகளின் தொகுப்பு இது.

(படங்கள்:தேவராஜன்)













# சமாதான சூழலைக் காக்கும் பொறுப்பு மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது

## 'நிதர்சனம்' பொறுப்பாளர் வலியுறுத்து



யாழ்ப்பாணம்,ஜூன்28

புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதன்மூலம் எமது தலைவர் சமாதானத்தில் கொண்டுள்ள ஈடுபாட்டை நிறைவேற்ற சமாதானத்தின் காவலர்களாக இங்கு வந்துள்ளோம். சமாதானத்தைக் குழப்பும் எந்தவொரு செயற்பாட்டையும் நாம் முன்னெடுக்க மாட்டோம். சமாதானத்தைக் குழப்புபவர்களுக்கு எதிராக மக்கள் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு, சமாதானச் சூழ்நிலையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு மக்கள் கைகளிலேயே உள்ளது. விடுதலைப் புலிகளின் நிதர்சனம் பொறுப்பாளர் சேரலாதன் மேற்கண்டவாறு கூறினார்.

ஊர்காவற்றுறையில் நேற்று நடந்த கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"செம்மணனைத் தாக்கியதைக் கண்டித்து மக்கள் இன்று வெளிப்படுத்திய உணர்வுகள் கடற்படையினரையும் அவர்களது சகாக்களையும் நிம்மதியாகத் தூங்கவிடாது.

"போராளிகளின் பின்னால் நாங்கள் இருக்கின்றோம்" என்பதை இன்று உணர்த்தியுள்ளீர்கள். மக்கள் காட்டிய எழுச்சி எமக்கு உற்சாகத்தைத் தருகின்றது.

யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்ட எம்மிடம் தலைவர் "சயனைட்டுடன் மட்டும் நீங்கள் போகலாம் மக்கள் உங்களைப் பாதுகாப்பார்கள்" என்று கூறினார். தலைவரின் கூற்று எந்தளவு தீர்க்கதரிசனமானது என்பதை இன்று நேரில் கண்டோம்.

சமாதானத்தில் நாட்டம் கொண்டு இலங்கையரசுடன் உடன்பாட்டில் தலைவர் கைச்சாத்திட்டார். அவர் சமாதானத்தில் கொண்டுள்ள ஈடுபாட்டை அடுத்து சமாதானக் காவலர்களாக இங்கு வந்தோம். அந்த உடன்பாட்டைத் தொடர்ந்து பாதுகாப்போம்.

மக்களின் சமாதானச் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டையாக உள்ள தடைகள் தகர்க்கப்படவேண்டும். ஆலயங்கள், பாடசாலைகள், வீதிகள் ஆகியவற்றிலிருந்து படையினர் வெளியேறவேண்டும். சமாதான உடன்படிக்கைமூலம் இதை நாம் செய்துள்ளோம்.

இதைச் செயற்படுத்த வேண்டிய பொறுப்பு மக்கள் கைகளிலேயே உள்ளது. மக்கள் தமது போராட்டங்கள்மூலம் இவற்றை நிறைவேற்ற வேண்டும்.

புதிய காவலரண்களை படையினர் அமைக்கின்றனர். பனைமரங்களை அழிக்கின்றனர். இவற்றுக்கெதிராக மக்கள்தான் போராடவேண்டும் - என்றார் அவர்.

(ஒ-3-8)

## விண்ணைத் தொட்ட பேரணிக் கோஷங்கள்

ஊர்காவற்றுறை,ஜூன்28

ஊர்காவற்றுறையில் நேற்று நடந்த சமாதான ஆதரவுப் பேரணியின்போது கடற்படைக்கும் ஈ.பி.டி.பிக்கும் எதிராகக் கோஷங்கள் எழுப்பப்பட்டன. சுலோக அட்டைகளும் தாங்கிச் செல்லப்பட்டன.

பெரிய அளவிலான பதாகைகளும் வாகனங்களில் கட்டப்பட்டிருந்தன.

பேரணியில் எழுப்பப்பட்ட கோஷங்களில் சில வருமாறு:-

★ ஈ.பி.டி.பி. ஒழிக! கடற்படையே வெளியேறு!

★ தேசவிரோதி டக்ளஸே ஒழிக!

★ எட்டப்பன் கூட்டத்தினை அரசே! தீவகத்தைவிட்டு உடன் வெளியேற்று!

★ ஒருபுறம் சமாதானம், மறுபுறம் அராஜகம்!

★ மாற்றானுடன் சேர்ந்து மானத்தை விற்றுவிட்டு தமிழ் இனத்தையுமா விற்கப்போகிறாய்!

★ போரிலே குளிர்காய்ந்தவர்களுக்கு சமாதானம் சுடுகிறது!

★ அரசே தீவகம் கயவர்களின் கோட்டையா? உடைத்து விடு உடனே!

என கோஷங்கள் எழுப்பப்பட்டன.

(ஒ-3-8-16-86)

## ஆரம்பத்தில் இருந்த சமாதான அவா பிரதமர் ரணிலிடம் இப்போது இல்லை

### எம்.கே. சிவாஜிலிங்கம் எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,ஜூன்28

ஆட்சிக்குவரும்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதானத்தை அடைவதற்காகக் கொண்டிருந்த மனநிலை இன்று மாறிவருவதையே அவதானிக்க முடிகின்றது. சமாதானத்தைக் குழப்புவதற்கு கங்கணம் கட்டி நிற்கும் ஈ.பி.டி.பி. அமைப்புடன் அவர்கள்ள உறவு வைத்திருப்பதே இந்த மனநிலை மாற்றத்துக்குக் காரணம் என ஊகிக்க முடிகின்றது.

- இப்படிக் கூறினார் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்.

ஊர்காவற்றுறையில் நேற்று நடந்த கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"தீவகத்தில் அரசியல் பணி மேற்கொள்வதற்காக விடுதலைப்புலிகளின் 30 உறுப்பினர்கள் கடந்த 17ஆம் திகதி தீவகம் வந்தபோது, கடற்படையினரும் அவர்களின் துணைப் படையான ஈ.பி.டி.பியினரும் புலிகளை ஏளனமாகப்பார்த்தனர். ஆயுதங்களுடன் அச்சுறுத்தல்களில் ஈடுபட்டனர்.

இன்று வந்த மக்கள் கூட்டம் அன்று புலி உறுப்பினர்களுடன் வந்திருந்தால் அவர்களின் கொட்டம் அன்றே அடங்கியிருக்கும். செம்மணனைத் தாக்கவும் துணிந்திருக்க மாட்டார்கள்.

இன்று மக்கள் எழுச்சி அவர்களைப பெட்டிப்பாம்பாக்கியிருக்கும் என்பதில சந்தேகம் இல்லை.

விடுதலைப்புலி உறுப்பினர்கள் தமது அரசியல் பணியை துணிவுடன் இங்கு மேற்கொள்ள மக்கள் இன்று உற்சாகத்தை வழங்கியுள்ளனர்.

வேலணையில் செம்மணன் தாக்கப்பட்டதையடுத்து புலிகள் பொறுமையையும் நிதானத்தையும் கடைப்பிடித்துள்ளனர். அன்று செம்மணனுக்கு ஏதாவது நடந்திருந்தால், இன்று நிலைமை என்னவாயிருக்கும்?

புரிந்துணர்வு உடன்படிக்கை உடைந்து, யுத்தம் வெடித்திருக்கும். சமாதானத்தை நம்பியிருக்கும் புலிகளும் மக்களும் பாதிக்கப்பட்டிருப்பர். சமாதானத்தை விரும்பாத கடற்படையினரும் ஈ.பி.டி.பியினரும் குதூகலித்திருப்பர்.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கு உதவி, சமாதானத்தைக் குழப்பும் செயலில் ஈடுபட்டுள்ள ஈ.பி.டி.பியினருக்கு முடிவு



காலம் நெருங்கிவிட்டது. இன்று தீவகத்தில் எங்கும் கடற்படையினரைக் காணவில்லை. அந்நிலை ஈ.பி.டி.பிக்கும் ஏற்படும். அதற்கு இன்றைய மக்கள் எழுச்சி அத்திவாரமாக அமையும்.

நாரந்தனையில் எமது கட்சி உறுப்பினர்கள்மீது ஈ.பி.டி.பியினர்தான் தாக்குதல் நடத்தினர் என்பது உறுதியான விடயம். ஆனால், அந்த அமைப்பின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவைக் கைதுசெய்ய அரசு பின்னடிப்பது ஏன்? கண்டியில் நடந்த சம்பவத்துக்காக முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையைக் கைது செய்யவில்லையா அதேபோன்று டக்ளஸை அரசு கைதுசெய்ய வேண்டும்.

ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலைச் சம்பவம் தொடர்பாக இன்று ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் கைது செய்யப்படுகின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பாக டக்ளஸைக் கைதுசெய்தால் எதிர்காலத்தில் அரசியல் படுகொலைகள் இடம்பெறாமல் தடுக்க முடியும் - என்றார் அவர்.

(ஒ-3-8)

## ஈ.பி.டி.பி. இந்த மண்ணைவிட்டு வெளியேறும் காலம் வந்து விட்டது

### ரவிராஜ் எம்.பி. தெரிவிப்பு

சமாதானத்தைக் குழப்பும் செயல்களில் ஈடுபட்டுள்ள துணைப்படையான ஈ.பி.டி.பி. இந்த மண்ணை விட்டு வெளியேறும் காலம் நெருங்கிவிட்டது. தானாக அது வெளியேறாவிட்டால் மக்கள் விரட்டி அடிப்பர்.

- இப்படிக் கூறினார் தமிழ்க் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ்.

ஊர்காவற்றுறைப் பிரதேச சபை திறந்தவெளியில் நேற்று நடந்த கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கையில் உள்ள தமிழர்கள் மட்டுமல்லாது சர்வதேசத்தில் உள்ள தமிழர்களும் விடுதலைப் புலிகளின் தலைமையில் ஒன்றுபட்டுள்ளனர். சமாதானத்தை முன்னெடுக்கும் விடுதலைப் புலிகளின் தலைமையை உலகமே பாராட்டி நிற்கின்றது.

சமாதானத்துக்கு எதிரான ஈ.பி.டி.பி. போன்ற அமைப்புகளுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்து விடுதலைப் புலிகளின் சமாதானச் செயற்பாடுகளைப் பலப்படுத்தவேண்டும்.

விடுதலைப் புலிகளின் தீவகப் பொறுப்பாளர் செம்மணன் தாக்கப்பட்டதைக் கண்டித்து ஈ.பி.டி.பியின் கோட்டை என்று கூறப்பட்ட தீவகத்தில் மக்கள் கிளர்ந்தெழுந்து தமது எதிர்ப்பைக் காட்டியுள்ளனர். இந்த மண்ணைவிட்டு அந்த அமைப்பு வெளியேறும்காலம் நெருங்கிவிட்டது.

தேர்தல் பணிக்காக வந்த எம்மை நாரந்தனையில் வைத்துத் தாக்கிவிட்டு "தீவுப்பகுதி மக்கள்தான் தாக்கினார்கள்" என்று ஈ.பி.டி.பி. கூறியது. இன்று செம்மணனைத் தாக்கிவிட்டு "புலிகள் மீதான வெறுப்பின் எதிரொலிதான் வேலணைத் தாக்குதல்" என்று டக்ளஸ் கூறுகிறார். இதற்கு எதிராகத் தீவகமக்கள் எழுச்சி கொண்டதன்மூலம் அவருக்கு நல்ல பாடத்தைப் புகட்டியுள்ளார்கள்.

கடற்படையினர் தீவகத்தில் மட்டும் அல்ல; தமிழர் பிரதேசம் எங்கும் தமது அராஜகச் செயற்பாடுகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இதற்கு எதிராக மக்கள் கிளர்ந்து எழுந்து குரல் கொடுக்கவேண்டும்.

சமாதானத்தில் கொண்டுள்ள நம்பிக்கை காரணமாக புலிகள் இன்று பொறுமை காக்கிறார்கள். புலிகளின் சமாதான நேசக்கரத்தை இறுகப் பிடித்து, அவர்கள் மீதான தடையை நீக்கி உடன் பேச்சுகளை ஆரம்பிக்க அரசு ஏற்பாடு செய்யவேண்டும்.



புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி ஆலயங்கள், பாடசாலைகள், வீடுகள் ஆகியவற்றில் இருந்து படையினர் வெளியேறவேண்டும். அவ்வாறு வெளியேறாவிட்டால் மக்கள் போராட்டங்கள் தொடரப்படவேண்டும் - என்றார். (ஒ-3-8)

## கொந்தளித்த மக்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்28

விடுதலைப் புலிகளின் தீவக பொறுப்பாளர் செம்மணன் மற்றும் தயாளன் ஆகியோர் தாக்கப்பட்டதைக் கண்டித்து நேற்று யாழ். நகரிலிருந்து தீவுப்பகுதிக்கு கண்டனப் பேரணி ஒன்று இடம்பெற்றது.

இப்பேரணியில் வாகனங்களில் சென்ற பொதுமக்கள் அனைவரும் கரம்பொன் பாலைக்காட்டுச்சந்தியில் வாகனங்களை விட்டிறங்கி கண்டனக் கூட்டம் நடைபெற்ற இடமாகிய ஊர்காவற்றுறை பிரதேச சபையின் திறந்தவெளி அரங்கிற்குச் சென்றனர்.

இடையே ஊர்காவற்றுறை ஈ.பி.டி.பியின் தலைமைச் செயலகத்தைக் கண்டதும் பொதுமக்கள் பெரும் திரளாகத் திரண்டு ஈ.பி.டி.பிக்கு எதிராகக் கோஷமிடத் தொடங்கினர்.

"ஈ.பி.டி.பியே தீவகத்தைவிட்டு வெளியேறு! ஈ.பி.டி.பி. ஒழிக! டக்ளஸ் ஒழிக!" என்ற கோஷங்களை அவர்கள் எழுப்பினர்.

பாலைக்காட்டுச் சந்தியில் பேரணி ஆரம்பமாகும்போது அவ்வழியாக மோட்டார் சைக்கிளில் வந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவரைக் கண்டபோது மக்கள் பலத்த எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பினர். இதனையடுத்து அந்த நபர் வேகமாக மோட்டார்சைக்கிளைச் செலுத்தி மறைந்தார். (ஒ-8)

## மூதூரில் அமைதியை ஏற்படுத்த அமைச்சர்கள் இருவர் முயற்சி

மூதூர்,ஜூன்28

கலவரங்களால் பாதிக்கப்பட்ட மூதூர் நகரில் மீண்டும் சுமுகநிலையை ஏற்படுத்தும் முயற்சியில் இரண்டு அமைச்சர்கள் நேற்று ஈடுபட்டனர். பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்ட இரு அமைச்சர்களும் மாலையில் சமாதானக் கூட்டம் ஒன்றைக் கூட்டினர். உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் ஆகிய இவ்விருவரும் ஹெலிகொப்டர்மூலம் நேற்று முற்பகல் மூதூரை வந்தடைந்தனர்.

மூதூர் பிரதேச செயலகத்துக்குச் சென்ற அமைச்சர்கள், சமயத் தலைவர்கள், பாதுகாப்பு அதிகாரிகள், ஊர்ப பிரமுகர்கள் ஆகியோரைச் சந்தித்தனர்.

திருமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, எம்.பிக்களான கே.எம்.தௌபீக், எம்.எஸ்.சின்ன தௌபீக், திருகோணமலை கண்காணிப்புக்குழு உறுப்பினர் கே.எம்.அக்பர் ஆகியோர் சகிதம் அமைச்சர்கள் குழுவினர் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று பார்வையிட்டனர். பாதிக்கப்பட்டவர்களையும் சந்தித்த குழுவினர், அசம்பாவிதங்கள் தொடர்பான விவரங்களையும் கேட்டறிந்தனர். பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைபெறுவோர், வெளியேறி வேறு இடங்களில் தங்கியிருக்கும் பொதுமக்களையும் குழுவினர் சந்தித்தனர். இதற்கிடையே மூதூரில் கலவரங்கள் தணிந்துள்ளன. ஆயினும், பதற்றமும் பீதியும் தணியவில்லை. போக்குவரத்து முற்றாக ஸ்தம்பித நிலையிலேயே உள்ளது. திருமலைக்கும் மூதூருக்கும் இடையிலான படகுச்சேவை மட்டுமே நடைபெறுகிறது. படகில் திருமலைக்கு வரும் தமிழ் மக்களை இராணுவத்தினர் கட்டைபறிச்சான் சோதனைச்சாவடிவரை பாதுகாப்பாக அழைத்து வருகின்றனர். தாக்குதலுக்கு அஞ்சி ஆலிம் நகர் மக்கள் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள சேனையூர் மத்திய மகா வித்தியாலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களுக்கு சம்பூர், கட்டைபறிச்சான், சேனையூர் கிராமவாசிகள் உணவு மற்றும் உடைகளை வழங்கிவருகின்றனர். கலவரங்கள் அடங்கியபின் அங்கு சென்று திரும்பிய சில இளைஞர்களின் தகவல்களின்படி வீடுகளும் உடைமைகளும் எரிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. (ஒ)

# பேரணியில் கலந்துகொண்டோருக்கு வெகுஜன ஒன்றியம் நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்28

தீவகத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் தாக்கப்பட்டது உட்பட சமாதானத்துக்கு எதிரான சக்திகளின் நடவடிக்கைகளைக் கண்டித்து நேற்றுக் குடாநாடு அடங்கலாக இடம்பெற்ற மக்கள் பேரணியிலும் பொதுக் கூட்டத்திலும் கலந்துகொண்ட அனைவருக்கும் யாழ்மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் தனது நன்றியைத் தெரிவித்துள்ளது.

யாழ்.குடாநாட்டின் சகல பகுதிகளிலும் இருந்து திரண்டு வருகை தந்த பொதுமக்கள் மற்றும் பல்வேறு பொது அமைப்புக்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், கூட்டுறவு, வர்த்தக, தனியார் நிறுவனங்கள், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் மற்றும் ஓட்டோ, சிற்றூர்தி, பாரவூர்தி உரிமையாளர்கள், வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையினர் ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவித்துள்ளது.

வர்த்தக நிறுவனங்கள் அனைத்தையும் நேற்று மூடியமைக்கு ஒன்றியம் நன்றி தெரிவித்துள்ளது. மக்கள் நலனைக் கருத்திற் கொண்டு நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் வர்த்தக நிறுவனங்களும் ஏனைய தொழில்சார் நிறுவனங்களும் முழுமையாகத் திறந்து தமது வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுமாறும் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(ஐ-10)

# ரெலிகொம் விவகாரங்களை கவனிக்க நாடாளுமன்றக் குழு

## அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு,ஜூன்28

எயார் லங்கா, ஸ்ரீலங்கா ரெலிகொம் ஆகியவற்றின் விவகாரங்களைக் கவனிக்கும் அதிகாரம் பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றக்குழுவிடம் ஒப்படைக்கப்படவிருக்கின்றது.

இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளது. இக்குழு தனது கருத்துக்களைத் தொடர்பு சாதனங்கள்மூலம் வெளியிடக்கூடிய வகையில் புதிய சட்டவிதிகளை அறிமுகப்படுத்தவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதற்கெனப் பிரதமர் அமைச்சரவைக் குழு ஒன்றை நியமித்துள்ளார். (ஐ-10)

# ஆனையிறவு வெளியில் விபத்து; மூவர் காயம்!

யாழ்ப்பாணம்,ஜூன்28

புதுக்குடியிருப்பில் உள்ள தமது உறவினர்களைப் பார்ப்பதற்காக மோட்டார்சைக்கிளில் குருநகரில் இருந்து சென்ற மூவர் ஆனையிறவு வெளியில் இடம்பெற்ற விபத்தில் சிக்கி .காயமடைந்தனர்.

ஆனையிறவு வெட்டவெளிப் பகுதியில் இடம்பெற்ற ஓட்டோ - மோட்டார்சைக்கிள் விபத்தில் சிக்கியே இவர்கள் மூவரும் காயமடைந்ததாகக் கூறப்படுகிறது.

நேற்றுக்காலை 8.30மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் சிக்கி காயமடைந்தவர்களில் பூங்கா வீதி, குருநகரைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ராஜன் (வயது 21) மற்றும் பற்றிக்ஸ் வீதி, குருநகரைச் சேர்ந்த அலோசியஸ் ஜக்சன் (வயது 25) ஆகிய இருவரும் அங்கிருந்து கொண்டுவரப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குருநகர் புதிய வீடமைப்புத் திட்டத்தைச் சேர்ந்த ஸ்ரீபன் றொபேட் (வயது 26) என்பவர் சிகிச்சைக்காக கிளிநொச்சி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர்கள் பயணஞ்செய்த மோட்டார்சைக்கிளும் சேதமடைந்துள்ளது.

இதேவேளை -

நேற்று மாலை 6.30மணியளவில் சிறுப்பிட்டிப் பகுதியில் இடம்பெற்ற வான் - மோட்டார்சைக்கிள் விபத்தில் சிக்கி கதிரவேலு தவச்செல்வம் (வயது 37) மற்றும் கிருஸ்ணன் வரதராஜன் (வயது 32) ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-6)


பொருளியற் கல்லூரி

நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

கே.கே.எஸ். றோட், இணுவில்.

A/L DAY CLASS

கலை - வர்த்தகப் பிரிவுகள்

ஆரம்பம்:

யாழ்நகரில் - 01.07.2002 - திங்கள் - 8.00மணி (ப.நே.)

இணுவிலில் - 03.07.2002 - புதன் - 8.00மணி (ப.நே.)

(5330)



முக்கிய அறிவித்தல்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டம்

- 26.06.2002 பொதுச் சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி இவ் அறிவித்தல் விடுக்கப்படுகிறது.
- யாழ். மாவட்டத்தில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனம், பிரத்தியேக வகுப்புகள், கணனித்துறை வகுப்புகள், பட்டப்படிப்பு வகுப்புகள், இசை வகுப்புகள் நடத்தும் அனைத்து நிறுவனங்களும், தனிப்பட்டவர்களும் தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தில் தமது வகுப்புகளைப் பதிவுசெய்துகொள்ளும்படி கேட்கப்படுகிறீர்கள்.
- 01.07.2002 முதல் 15.07.2002 வரையுள்ள காலப்பகுதிக்கு இடையில் பதிவுகளை மேற்கொள்ளவேண்டும். இப்பதிவுகள் யாவும் கல்விக் கோட்டரீதியாகச் செய்யப்படவுள்ளன. தனியார் கல்வி நிறுவனங்களின் கல்விக் கோட்டங்களுக்குப் பொறுப்பானவர்களுடன் தொடர்புகொள்ளவும்.
- மேலதிக விவரங்களுக்கு 142, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.

செயலாளர்,

(5329) தனியார் கல்வி நிறுவன ஒன்றியம், யாழ்.மாவட்டம்.


# புலிகள் அலுவலகம் தாக்கப்பட்டதற்கு தனி ஒருவரின் செயற்பாடே காரணம்

## கண்காணிப்புக் குழு உறுப்பினர் விளக்கம்

திருகோணமலை,ஜூன்28

மூதூரில் விடுதலைப் புலிகளின் அலுவலகம் தாக்கப்பட்டமைக்கு விடுதலைப் புலிகளால் பாதிக்கப்பட்ட ஓர் இளைஞரே காரணமாவார் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினர் அப்துல் ரகுமான் தெரிவித்துள்ளார்.

தனது ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக அல்லது பழிவாங்குவதற்காக இன்னும் சில இளைஞர்களுடன் சேர்ந்து அவர் புலிகளின் அலுவலகத்தைத் தாக்கியுள்ளார். ஆனால், அச்சம்பவத்தின் பிரதிபலிப்பு முஸ்லிம் சமூகம் புலிகளின் அலுவலகத்தைத் தாக்கியதாகவோ அல்லது பேச்சுக்களைக் குழப்புவதற்கு எடுக்கப்படும் முயற்சியாகவோ கருதப்படும் கருத்து மாற்றப்படவேண்டும்.

எல்லா இனங்களிலும் இருப்பது போலவே ஒரிரு குழப்பக்காரர்கள் அல்லது அமைதியை விரும்பாதவர்கள் முஸ்லிம் சமூகத்திலும் இருக்கக் கூடும். எனவே, இதனை ஒரு சில தனிப்பட்ட நபர்களின் நடவடிக்கை என்று பாராமல் முஸ்லிம் சமூகத்தின் நடவடிக்கை என்று பார்ப்பது ஆபத்தானது. இது அமைதியான சூழல் ஒன்றை உருவாக்குவதற்கு உகந்ததல்ல என்று அவர் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

(ஐ-10)

# மரத்திலிருந்து வீழ்ந்து காயம்

தென்மராட்சி,ஜூன்28

தென்னை மரத்தில் ஏறி கிளி பிடிக்க முயன்ற எட்டு வயதுச் சிறுவன் ஒருவன் மரத்தில் இருந்து தவறி வீழ்ந்து காயமடைந்த சம்பவம் கடந்த செவ்வாயன்று கரவெட்டி இராச கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பத்தில் இதே இடத்தைச் சேர்ந்த நாகரத்தினம் சிறிதரன் என்னும் சிறுவனே காயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

இதேவேளை, பனையோலை வெட்டுவதற்கு மரத்தில் ஏறிய இளைஞர் ஒருவரும் தவறி வீழ்ந்து காயமடைந்துள்ளார்.

அல்வாய் தெற்கு, தேவரையாளியைச் சேர்ந்த கலைச்செல்வன் கலையழகன் (வயது 19) என்னும் இளைஞரே இந்தச் சம்பவத்தில் காயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-117)

# பங்களாதேஷில் இலங்கை படைக்கு பயிற்சி

டாக்கா,ஜூன்28

இலங்கை, இந்தியா உட்பட 21 நாடுகள் கலந்துகொள்ளும் இராணுவப் பயிற்சிகள் செப்ரெம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கின்றன. பங்களாதேஷும் அமெரிக்காவும் இணைந்து இப்பயிற்சியை நடத்தவிருக்கின்றன.

செப்ரெம்பர் 8ஆம் திகதி பங்களாதேஷில் ஆரம்பமாகும் இப்பயிற்சியில் பங்களாதேஷ், இலங்கை, இந்தியா, நேபாளம், அமெரிக்கா, மொங்கோலியா ஆகிய ஆறு நாடுகளும் தீவிரமாகப் பங்குபற்றும். இவ்வாறான ஒரு பயிற்சி பங்களாதேஷில் நடைபெறுவது இதுவே முதற்றடவையாகும். செப்ரெம்பர் 27ஆம் திகதி பயிற்சிகள் முடிவடையும்.


தேவை

அரைக்கும் ஆலைக்கு அனுபவம் உள்ளவரும் பயிலுநரும் தேவை.

தொடர்பு:

பிருந்தா மில்ஸ

No.18. றக்கா றோட். யாழ்ப்பாணம். (5332)



அறிவொளி - NALLUR

COMBINED MATHS

Mr.B. ரவீந்திரன் B.Sc.

A/L-03 தொடர்கள்

ஆரம்பம்:

29.06.2002 Sat.4 p.m.

A/L-02 துரித மீட்டல் வகுப்பு

Wed.,Fri-4 p.m., Sat.Sun. 10a.m.

வகுப்புகள் நடைபெறுகின்றன. (5304)



ராஜா யாழ்ப்பாணம்.

குணால், மோனல் மற்றும் பலர் நடித்த

பேசாத கண்ணும் பேசுமே...

காட்சிகள்: தினசரி 10.30, 2.30

சனி, ஞாயிறு 10.30, 2.30, 5.30

(C/22538)



நிரஞ்சனாஸ் சங்கானை

ஸ்ரீகாந்த், பூமிகா, ரகுவரன், விவேக் நடித்த

ரோஜாக்கூட்டம் (மிக்ஸ்)

தினசரி: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்) C-22539


# மரண அறிவித்தல்கள்

## திருமதி மரியம்மா பத்திநாதர்

*(இளைப்பாறிய ஆசிரியை, அளவெட்டி)*

அலுக்கை, அளவெட்டியைச் சேர்ந்த திருமதி மரியம்மா பத்திநாதர் அவர்கள் நேற்று (27.06.2002) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் இளைப்பாறிய அதிபர் பத்திநாதர் (பயஸ்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஜெயரட்ணம் மற்றும் ஞானரட்ணம், தேவரட்ணம், யோகரட்ணம், பாலரட்ணம், ஜீவரட்ணம், அருட்சகோதரி புளோறினா, நேசரட்ணம் (தி.சி.க.), நவரட்ணம், குணரட்ணம், தவரட்ணம், தனரட்ணம், அருட்பணி ஜெபரட்ணம், விமலரட்ணம் ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசேந்திரம், காலஞ்சென்ற இராசநாயகம் மற்றும் மரியதாஸ், நவமலர், யசிந்தா, பபா மரியற்றா ஆனந்தராசா, அருள்தாசன், ஜெகசோதி ஆகியோரின் அன்பு மாமியாரும் பெனராஜ், சாந்தி, ஆனந்தி, ஜெயந்தி, சுகந்தராஜ், மொறீன், டெஸ்மன், மீரா, இதயராஜ், அமல்ராஜ், வனிதா, எல்றோய், லியோன், ஷிரோன், விமலினி, ஜெறோன், டிலீசியா, வளன், அமலினி, நிமலினி, ஜான்சி, வலென்ரீனா, மிலோஜன், மிலோஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ராகுல், ராகவி, ஸ்ரெபானி, சாளினி, தானியா, ஜோன், டிலான், டேமியன், ரோஷான், யோசுவா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

நாளை (29.06.2002) சனிக்கிழமை பிற்பகல் 3.30மணியளவில் அளவெட்டி புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெறும திருப்பலியைத் தொடர்ந்து நல்லடக்கம் அளவெட்டி சேமக்காலையில் நடைபெறும்.

தகவல்:

ஞா.பத்திநாதர் (கணவர்),

அருட்பணி ஜெபரட்ணம் (மகன்).

*அலுக்கை,*
*அளவெட்டி.* (5328)

## கனகசபை பரமசாமி

No.31,புதுவீதி, கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கனகசபை பரமசாமி நேற்று (27.06.2002) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலணை கிழக்கைச் சேர்ந்த பசுபதிப்பிள்ளை - அன்னப்பிள்ளையின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவயோகத்தின் (குணம்) அன்புக் கணவரும் பத்மாவதி (ரதி, கொழும்பு), பத்மநாதன் (கனடா), சிறிதரன் (யாழ்ப்பாணம்), லோகநாதன் (சுவிஸ்), காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகநாதன் (கொழும்பு), செல்வி (கனடா), விஜயராணி (ஆசிரியை, துரையப்பா மகா வித்தியாலயம் - யாழ்ப்பாணம்), நிமாலினி (சுஜி - சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பாருஜன், ஆருதி (கனடா), கஜிந்தன், அஜிதா, சுஜிதா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், அழகரெத்தினம், நடேசபிள்ளை மற்றும் அன்னலெட்சுமி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் அரசரெத்தினம் (இளைப்பாறிய தபால் அதிபர்), இராசரெத்தினம், சீவரெத்தினம் (பிரான்ஸ்), திலகவதி, தனலெட்சுமி கமலாதேவி (வேலணை) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.06.2002 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

திருமதி பத்மாவதி யோகநாதன் (மகள்)

இராசரெத்தினம் (மைத்துனர், வேலணை)

*No.31,புதுவீதி,*
*கொய்யாத்தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.* (5333)

## K.S.நடராஜா

(M.Man Nadarajah)

**(இளைப்பாறிய விரிவுரையாளர், திருநெல்வேலி ஆசிரிய கலாசாலை)**

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட K.S. நடராஜா அவர்கள் நேற்று (27.06.2002) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

(5334) புவிராஜசேகரம் (பேபி).

## சுந்தரம் நடராசா

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் நடராசா அவர்கள் நேற்று (27.06.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - அன்னம்மா தம்பதியினரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான அன்னமுத்து - சுப்பிரமணியம் ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் மயில்வாகனம், மகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான செல்வரெத்தினம், பத்மாவதி மற்றும் பூமணி, பாக்கியநாதன் (பிரான்ஸ்), இராஜேந்திரம் (U.K.) ஆகியோரின் தந்தையும் சாந்தின், கந்தசாமி, கமலாதேவி (பிரான்ஸ்), கீதா (U.K.) ஆகியோரின் மாமனாரும் சதீஸ்குமார் (U.K.), பாமினி, தர்சினி, ஜெயந்தி, சாந்தன், காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் சுரேஸ்குமார், சிவகுமார் (U.K.), பத்மபிரியா, ஜிற்ரேந்திரா, றேனுகா, சால்ஸ் (பிரான்ஸ்), அருணன் (U.K.) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

க.சுரேஸ்குமார் (பேரன்)

(முத்துக்குமரன் ரெக்ஸ்ரைல் ஊழியர்)

*109, இராஜேஸ்வரி வீதி,*
*நாயன்மார்கட்டு,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.* (5335)

# பொலீஸாருடன் மோதல்

காத்தான்குடி நகரில் நேற்று நடந்த ஆர்ப்பாட்டத்தின்போது பொலீஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டது. இதில் பல இளைஞர்கள் காயமடைந்தனர்.

அமைதியைக் கடைப்பிடிக்குமாறு பொலீஸார் கோரவே ஆத்திரமுற்ற இளைஞர்கள் பொலீஸார்மீது கற்களை சரமாரியாக வீசினர். ஆர்ப்பாட்டக்காரர்களை பொலீஸார் கட்டுப்படுத்தமுடியாது போகவே விசேட மோட்டார்சைக்கிள் படையினரும் இராணுவத்தினரும் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டின்கீழ் கொணடு வரப்பட்டது.

பொலீஸார் தடியடிப் பிரயோகம் செய்து வீதியில் கூடி நின்ற கூட்டத்தைக் கலைத்தனர். (ஐ-10)

## ஒழுங்கிணைப்பு குழுவின் கூட்டம்

வடமராட்சி கிழக்குப் பிரதேச ஒழுங்கிணைப்புக் கூட்டமும், மீள்குடியமர்வு புனர்வாழ்வுக் கூட்டமும் எதிர்வரும் ஜுலை 2ஆம் திகதி மருதங்கேணியில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் முற்பகல் 10மணிக்கு உதவி அர்சாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளன.

வடமராட்சி கிழக்கின் மீள்குடியமர்வுக்குப்பின் நடைபெறும் முதலாவது ஒழுங்கிணைப்புக்குழுக்கூட்டம் என்பதால் சகல திணைக்களத் தலைவர்களையும் கலந்துகொண்டு பிரதேச அபிவிருத்தி சம்பந்தமான முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும்படி வேண்டப்பட்டுள்ளது. (ஐ-182)

## பிரதமரிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏற்படுத்தவேண்டும். இது பற்றிப் பிரதமருடன் தொடர்புகொண்டு பேசினேன். அதற்கு அவர் உரிய நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகவும், நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொணடு வருவதாகவும் தெரிவித்துளளார்.

இரு சமூகமும் ஒன்றாக வாழ வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஒன்றாகவே நாம் வாழவேண்டும். எனவே, சில விசமிகள் செய்கின்ற இச்செயல்களைத் தடுத்துநிறுத்தி இரு சமூகத்தவர்களும் ஒன்றாக சகோதரத்துடன் வாழவும் ஐக்கியத்தைப் பேணவும் செயற்பட வேண்டும் - என்று ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.(ஐ-10)

## முன்பள்ளி விளையாட்டு விழா

வலி.மேற்கு,ஜுன்28

கோண்டாவில் மேற்கு தமிழ் வேத பாராயண சனசமூக நிலைய முன்பள்ளியின் முதலாவது விளையாட்டு விழா எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணியளவில் சனசமூக நிலையத் தலைவர் தா.தியாகமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஸ்ணசாமி கலந்துகொள்கின்றார். (ஐ-173)

# தீவகம் நோக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரமுகர்கள் அதன்பின்னால் சென்றனர்.

ஓட்டோக்கள், போக்குவரத்துச் சபையின் பஸ்கள், மினிபஸ்கள், லொறிகள், மோட்டர் சைக்கிள்கள் உட்பட 300 இற்கும் மேற்பட்ட வாகனங்களில பொதுமக்கள் சென்றனர்.

பண்ணையில் இருந்து புறப்பட்ட வாகன அணி, அல்லைப்பிட்டிச் சோதனை நிலையத்தை அடைந்ததும் அங்கு பணியில் இருந்த பொலீஸார் சோதனைகள் ஏதும் இன்றி வாகனங்களைச் செல்ல அனுமதித்தனர். இடையிடையே ஒரு சில வாகனங்கள் மட்டும் சோதனையிடப்பட்டன.

அல்லைப்பிட்டி சோதனை நிலையத்தைத் தாண்டியதும் வாகனத்தில் சென்றோர் 'ஈ.பி.டி.பி. ஒழிக!', 'கடற்படையே வெளியேறு' என்று கோஷங்களை எழுப்பினர்.

வாகன அணி புளியங்கூடல் ஊடாக, கரம்பொன் பாலக்காட்டுச் சந்தியை சுமார் ஒரு மணியளவில் சென்றடைந்தது. பின்னர் அங்கிருந்து ஊர்வலம் முன்னேறியது.

தீவகத்தில் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, நயினாதீவு, புங்குடுதீவு, வேலணை ஆகிய இடங்களில் இருந்து அங்கு வந்திருந்த சுமார் 3 ஆயிரம் பொதுமக்கள் பேரணியில் இணைந்து கொண்டனர். ஆண்கள், பெண்கள், வயோதிபர்கள், பாடசாலை மாணவர்கள், கடற்றொழிலாளர்கள், கூட்டுறவாளர்கள், அரச அதிகாரிகள், தொழிலாளர்கள் ஆகியோர் பேரணியின் முன்பாக நீண்ட வரிசையில் சென்றனர். யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்ட வாகன அணியில் சென்றவர்கள் அவர்களைப் பின் தொடர்ந்தனர்.

பல்கலைக்கழக மாணவர்கள், கூட்டுறவாளர்கள், கடற்றொழிலாளர்கள், அரச உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் என 10 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் பேரணியில் உணர்ச்சி பொங்க பங்குபற்றினர்.

இந்து, கிறிஸ்தவ, முஸ்லீம் மதபிரமுகர்களும் பேரணில் பங்கேற்றனர்.

பேரணி சென்றடைந்ததும் ஊர்காவற்றுறை பிரதேச சபை திறந்த வெளி அரங்கில் பிற்பகல் 2 மணிக்கு தீவக மக்கள் நலன் காப்பகத்தின் தலைவர் த.சத்தியதாசன் தலைமையில் கண்டனக் கூட்டம் ஆரம்பமானது.

இக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான என்ரவிராஜ், எம்கே. சிவாஜிலிங்கம், விடுதலைப் புலிகளின் நிதர்சனம் பொறுப்பாளர் சேரலாதன், யாழ்.பல்கலைக்கழக மாணவி செல்வி ஜெயா, அதிபர் அருணகிரிநாதன், அருந்தவபாலன், வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சு.சிறில், வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கத்தலைவர் எஸ்.சூரியகுமார் ஆகியோர் உரையாற்றினர்.

(ஐ-ரி-3-6-8-11-16-17-27-28-31-86-135-139-173)

## நாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கலாநிதி சந்தன ஜெயரத்ன மேலும் தெரிவித்ததாவது:-

பராக்கிரம சமுத்திரத்துக்கு அப்பால் காட்டுப்பகுதியில் ஒளிப்பிளம்பு ஒன்று காட்டின் மத்தியில் இருந்து மேல் எழுந்து மறைந்துள்ளது. 'வி' (V) வடிவ ஒளிரும் பொருள் ஒன்று வஸ்கம் காட்டுப்பகுதிக்குள் இறங்கியுள்ளது. நாட்டின் பல பகுதிகளிலும் ஒளிரும் மர்மப்பொருள்களைக் கண்டதாகப் பொதுமக்கள் கூறிய தகவல்களும் ஆய்வுமூலம் பெற்ற தகவல்களும் ஒன்றுக்கொன்று சரியாக இருப்பது தெரியவந்துள்ளது. எனினும் மர்மப்பொருள்களில் குள்ளமான உருவங்கள் இருப்பதாகக் கூறப்படுவது புனைகதைகளாகும். இலங்கையில் இத்தகைய பறக்கும் மர்மப் பொருள்கள் அதிகளவில் தென்படுவது குறித்த ஆய்வுத் தகவல்கள் அமெரிக்காவுக்கு அனுப்பப்படவுள்ளன - என்று அவர் தெரிவித்தார். (ஐ)

# வன்செயல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பின்னர் உயிரிழந்தார்.

ஓட்டமாவடி, வாழைச்சேனைப் பகுதிகளில் துப்பாக்கிச் சூடு, குண்டு வெடிப்பு, கல்லெறி, தீ வைப்புச் சம்பவங்கள் நடைபெற்றன. இவற்றின விளைவாக பத்து பொதுமக்களும் படை சிப்பாய் ஒருவரும் காயமடைந்தனர்; ஏழு கடைகள் எரிக்கப்பட்டன்; பல வாகனங்கள் சேதமடைந்தன.

இச் சம்பவங்களை அடுத்து வாழைச்சேனையில் ஊரடங்கு அறிவிக்கப்பட்டது. அம்பாறையிலும் நேற்று ஹர்த்தால் நடந்தது. சம்பவங்கள் அறிவிக்கப்படவில்லை.

ஓட்டமாவடியிலும் வாழைச்சேனையிலும் நேற்றுப் பல அசம்பாவிதச் சம்பவங்கள் நிகழ்ந்தன. ஓட்டமாவடியில் வாகனங்களை வழிமறித்தவர்களைக் கலைக்க பொலீஸார் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். வாழைச்சேனையில் கைக்குண்டு எறியப்பட்டதால் நான்கு தமிழ் இளைஞர்கள் காயமடைந்தனர்.

மூதூர் சம்பவங்களைக் கண்டித்து காத்தான்குடி, ஓட்டமாவடி, வாழைச்சேனை ஆகிய பகுதிகளில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அப்போதே இச்சம்பவங்கள் நடைபெற்றன.

மட்டக்களப்பில் இருந்து வவுனியா, கொழும்பு ஆகிய இடங்களுக்குச் செல்ல வந்த வாகனங்களை ஓட்டமாவடி ஊடாகச் செல்லவிடாது ஒரு குழுவினர் நேற்றுக்காலை வழிமறித்தனர். நடுவீதியில் ரயர்களையும் எரித்தனர். இதனையடுத்து அங்கு வந்த வாழைச்சேனை பொலீஸார் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். ஆனாலும் அந்தக் குழுவினர் கலைந்து செல்லவில்லை.

நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் பயணத்தைத் தொடரமுற்பட்டபோது அவற்றின் மீது கற்கள் எறியப்பட்டன. பட்டாசுகள் கொளுத்தி வீசப்பட்டன. இதனால் பஸ்களுக்குச் சிறு சேதங்கள் ஏற்பட்டதுடன் சில பயணிகளும் காயமடைந்தனர். வாழைச்சேனையில் இனம் தெரியாத நபர்களால் எறியப்பட்ட கைக்குண்டு ஒன்றினால் காயமடைந்த மூன்று தமிழ் இளைஞர்கள் வாழைச்சேனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். மேலதிக சிகிச்சைக்காக அவர்கள் பின்னர் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். மாங்கேணியைச் சேர்ந்த பகீரதன் (25 வயது), நாசிவன்தீவைச் சேர்ந்த விக்னேஸ்வரன் (23 வயது), கண்ணகிபுரத்தைச் சேர்ந்த மோகனதாஸ் (23 வயது) ஆகியோரே இம் மூவருமாவர்.

இச்சம்பவங்களினால் நகரம் வெறிச்சோடியது. கடைகள் யாவும் மூடப்பட்டன. பதற்றமானநிலை உருவானது.

வாழைச்சேனை பிரதேச செயலாளர் அலுவலகத்துக்கு அருகே காலை 10 மணியளவில் மோட்டார் சைக்கிள் ஒன்று இனந்தெரியாதோரால் எரிக்கப்பட்டது. (ஐ-10)

## அமைதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
னர். அத்துடன் தனியார் பஸ்களும், கிழக்கு பிராந்திய போக்குவரத்து பஸ்களும் கற்கள் வீசப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் அடித்து சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர்.

அன்பார்ந்த தமிழீழ மக்களே! தீய சக்திகளின் கைக்கூலிகளாக நிற்கும் முஸ்லிம் குண்டர்களின் கொடூர செயலுக்காக அப்பாவி முஸ்லிம்களுக்கு எந்தத் தீங்கும் செய்யாது எமது உரிமைகளைப் பெற அமைதி காத்து அணிதிரளுமாறு கேட்டுக்கொள கிறோம் - இவ்வாறு புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## பண்ணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ருந்த காவலரண்கள் எதிலும் கடற்படையினரைக் காணமுடியவில்லை.

மண்டைதீவுச் சந்தி, அல்லைப்பிட்டிச் சந்தி ஆகிய இடங்களில் மட்டும் சோதனை நிலையங்களுக்குள் கடற்படையினர் இருந்தனர். ஆனால், அவர்கள் எந்தவித சோதனை நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை.

ஊர்காவற்றுறை கட்டளை அதிகாரி லெப். கொமாண்டர் சந்திரசிறி அல்லைப்பிட்டி சோதனை நிலையத்தில் இருந்து சுமார் 200 யார் தொலைவில் காணப்பட்டார்.

அல்லைப்பிட்டி சந்தியிலும், கூட்டம் நடைபெற்ற இடத்திலும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் ஒரு சிலரே ஊர்காவற்றுறையில் காணப்பட்டனர்.

(ஐ-3-6-8-11-16-17-27-28-31-86-135-139-173)


**இலங்கை வங்கி யாழ். மேற்தரக் கிளை**
**வாடிக்கையாளருக்கான முக்கிய அறிவித்தல்**

01.07.2002 முதல் யாழ். மேற்தரக்கிளையின் வங்கிச் சேவைகள் கணனி மயமாக்கப்படுவதை முன்னிட்டு சில ஆரம்ப வேலைகள் நடைபெற வேண்டியுள்ளதால்

29.06.2002 சனிக்கிழமை அன்று மட்டும்

இவ்வங்கி வாடிக்கையாளர் சேவைகளுக்காக மூடப்பட்டிருக்கும்.

இதனால் தங்களுக்கு ஏற்படக்கூடிய வசதியீனங்களுக்கு மனம்வருந்துவதோடு எதிர்வரும் காலங்களில் பூரண கணனி மயப்படுத்தப்பட்ட சேவைகளை உங்களுக்கு அளிப்போமென்று இத்தால் அறியத்தருகின்றோம்.

சிரேஷ்ட முகாமையாளர்,
இலங்கை வங்கி மேற்தரக் கிளை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(C/22705)



**இலவச கணனிப் பயிற்சி நெறி**

இவ் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அல்லது சுயமாக தயாரித்து கீழ் காணும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பவும்.

பயிற்சி ஆரம்பம்
29.06.2002(11.00am)
06.07.2002(3.00pm)

பதிவாளர்.
இல.07,பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

APPLICATION FORM
Full Name :-
Address :-
Date of Birth:-
Select Course:-
Date. Signature Of Applicant

Diploma in Microsoft Office
- Introduction to Computer
- MS Word XP
- MS Excel XP
- MS Access XP
- MS Outlook XP
- MS Power point XP
- Photo Draw XP

Diploma in Computer Programming
- Introduction to Computer
- MS Windows XP
- Programming Techniques
- MS Word XP
- MS Access XP
- Visual Basic
- C++
- E-Mail &Internet
- HTML Programming

Certificate Courses
- MS Word XP
- MS Excel XP
- MS Access XP
- Auto CAD
- Visual Basic
- Visual FoxPro
- Corel Draw

JAFFNA TECHNICAL INSTITUTE
JAFFNA, SRI LANKA

Head Office.
No.11/10B, Stanley Road,
Jaffna.

Branch.
No.07, Palaly Road,
Jaffna.



**BEACON**
யாழ்நகர்
ENGLISH
By. BRITTO
GRAMMAR CLASSES FOR
G.A.Q. AND SPOKEN
ஆரம்பம்: 29.06.2002
சனி மதியம் 2.00 p.m.
(5276)



**RAW**
**றோ**
மிக விரைவில்
விற்பனைக்கு
வருகிறது.
(C/22723)



**B.A. Part I, B.A. Final**

யாழ். பல்கலைக்கழக வெளிவாரி விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன! அனுமதிகளை 07.07.2002இற்கு முன் பெற்றுக்கொள்ளவும.

நிர்வாகி S.அருள்நங்கை
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(5214)



**யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**
அபிவிருத்தி நிதிக்காக நடத்தப்படும்
பாதாளக் கிணற்றில்
**மாபெரும் சாகஸ நிகழ்வு**

தென்னிலங்கைக் கலைஞர்களின் சாகஸங்களைக் காண்பதற்கு மீண்டும் கிடைக்காத ஓர் அரிய சந்தர்ப்பம்!!

இடம் : கல்லூரி மைதானம்
காலம் : 28.06.2002 வெள்ளிமுதல் 02.07.2002 செவ்வாய்வரை
காலை 8.00 மணிமுதல் மாலை 8.00 மணிவரை
அனைவரும் திரண்டு வாரீர்!!

கட்டணம் பெரியோர் : ரூபா 40/-
மாணவர் : ரூபா 25/-

பழைய மாணவர் சங்கம்,
யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

(C/22706)



**எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள்**
ஆரம்பம்: 30.06.2002
ஞாயிற்றுக்கிழமை (3.00மணி)
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(5213)



THE HALO TRUST
**தேவை - மொழிபெயர்ப்பாளர்**

கண்ணிகள் அகற்றும் பணியில் நிபுணத்துவம் வாய்ந்த பிரித்தானிய அரச சார்பற்ற நிறுவனமொன்றிற்கு மொழிபெயர்ப்பாளர்கள் தேவைப்படுகின்றனர். வண்ணப்பதாரிகள் ஆங்கில, தமிழ், சிங்கள மொழிகளில் தேர்ச்சியும் சரளமாகப் பேசும் திறனும் 25 - 35 வயதுக்குட்பட்டவர்களாகவும் வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரமுடையவர்களாகவும் (நடைமுறையிலுள்ள) இருத்தல்வேண்டும்.

தொடர்புகளுக்கு:
THE HALO TRUST,
655, NAVALAR ROAD,
JAFFNA. T.P. - 3779.
(5305)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.06.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.